# திராவிடநாடு

-3-59 | வார வெளியீடு | விலை 16 காசு


# சொல்லா தேயினி மேலே!

( ஆ. ஆரிது )

சொல்லா தேயினி மேலே! சொல்லித்
துயரை வளர்க்கா தேயினி யேனும்!
புல்லாய் வதைவத னாலே முன்கதை
சொல்லா தேயினி மேலே! தமிழா (சொல்)

பொன்னும் புகழும் மலையாய்ச் சேர
புவியோர் வாழ்விற் கொளியாய் நின்றாய்
என்னும் சரிதம் மெய்யா பொய்யா?
இழிவை அணைத்த அடிமைத் தமிழா (சொல்)

பண்பும் துணிவும் நெஞ்சில் இலையா?
பராரி நிலையில் பற்றோ சொல்லடா!
கண்ப டைத்த தமிழ் நிலையா?
கடமை மறந்த மிருக நிலையா? (சொல்)

உந்தன் இன்றைய நிலைமை என்ன?
உலகில் முன்னோர் நாட்டிய வன்புகழ்
மொந்தைக் கள்ளாய் மயங்கிற் றோடா?
மொழியை நாட்டைக் கொன்றாய் அதனால் (சொல்)

# கண்டதும் கேட்டதும்

எங்கேயோ ஒரு ஊரில் திருவாய் திறந்த முதலமைச்சர், திராவிட முன்னேற்றக்கழகத்தைப் பிச்சைக் காரனுக்கு ஒப்பிட்டுப் பேசினாராம்! பாட்டுப்பாடி ஆட்டமும் ஆடும் பிச்சைக்காரனைச் சுற்றி மக்கள் கூடுவது போல நமக்கும் வருவதாகவும், நமது பேச்சைக் கேட்டு முடித்ததும் அவர்கள் போய் விடுவதாகவும் சொன்னாராம்! மக்களைக் கூட்டுகிற அளவுக்கு, ஒரு பிச்சைக்காரனாலும் முடிகிறது. ஆனால், ஊராரும் இந்தப் பெம்மான்களால் அதுவும், முடிய வில்லை. அதுபோகட்டும். இந்தச் செய்தியை, ஏட்டில் படித்த எம். எல். ஏ. கோவிந்தசாமி அப்போதுதான் சி. என். ஏ-யிடம் சொல்லவேண்டும்! சட்டமன்றத்தில், நிதிநிலை அறிக்கையின்மீது கடைசி நாள் விவாதம். பிட்டுப் பிட்டு நமது எம். எல். ஏ-க்கள் இத்தடவை, வெளுத்துக்கட்டி யிருக்கின்றனர். நான் உட்கார்ந்திருந்த 'நிருபர்கள் காலரி'யில் கூடப் பேசிக்கொண்டார்கள். பருவமழையில்லை! என்றாராம், கவர்னர் தம் பேருரையில். பருவ மழை சரியாகப் பெய்தது! என்றாராம் நிதியமைச்சர், தனது நிதி நிலை அறிக்கையில். இந்த முரண்பாடுசரியா? எனக் கருணாநிதி கிளப்பி விட, சர்க்காரின் புள்ளி விவரங்கள் எப்படி ஒன்றுக்கொன்று முரணாயிருக்கிறது என்று ப. உ. சண்முகம் கேட்க, இப்படி ஒவ்வொரு வரும பல்முனைகளில் சர்க்காரின் போக்கினை இடித்துரைத்திருக்கிறார்கள். கடைசி நாள் விவாதத்தில் சட்டமன்ற தி. மு. க. தலைவர் பேசவேண்டும்! பிறகு, எல்லாவற்றிற்கும் நிதியமைச்சர் சுப்பிரமணியம் பதில் கூறுவார்!!

கடைசி நாள் விவாதம் என்பதால், நான் போயிருந்தேன், 'நிருபர்' சீட்டுடன். ஒரு மணி நேரம் வரையில் நமது தலைவருக்கு நேரம் தரப்பட்டிருப்பதாகப்பேசிக் கொண்டார்கள். அதிகம் பேரைப் பேசச்சொல்ல வேண்டியதாலோ என்னவோ, 45 நிமிடங்களே தந்தார்கள்! எப்படிப்போதும் என்று நான் நினைத்தேன். ஏனெனில், சி. என். ஏ. பேசுவதாகயிருந்த குறிப்புகள் பல.

நிதிநிலையறிக்கை பற்றிய நமது நோக்கையும், நமது நாட்டுக்கு எப்படியெப்படி வருமான இனங்கள் வளரவேண்டுமென்பதையும், எடுத்துரைததார். வரிபோட்டு மட்டுமே காலம் கழிக்க நினைக்காமல், சர்க்காரும் சம்பாதிக்கவேண்டும் என்றார். பஸ் போக்குவரத்துக்களைச் சர்க்காரே ஏற்று

**நமது நிருபர்**

நடத்தலாம், சினிமாக்கொட்டகைகளை நடத்தலாம், இறைச்சிப் பண்ணைகளை வைக்கலாம் என்றெல்லாம் சொன்னார். இறைச்சிப் பண்ணையைப்பற்றி, கடந்த ஆண்டுகூட சொன்னார்! உடனே, 'திக்விஜயம்' கிளப்பிய மந்திரிகள் செப்பினார்கள், "அண்ணாத்துரையைத் திட்டம் கேட்டால் கசாப்புக் கடை வைக்கச் சொல்கிறார்! இது ஒரு திட்டமா?", என்று. இப்படிச் சொல்லும், இந்த அரசு, மீன் பண்ணை வைக்காமலில்லை. அதை வளர்க்க வேண்டுமெனப் பணம் செலவழிக்காமலுமில்லை. நாம் சொல்லிவிட்டோமே! அதனால்; எங்குபோனாலும், இந்தமந்திரிகள் கேட்டார்கள, 'இது ஒருதிட்டமா!' என்று. காஞ்சிக்கு ஒரு பொதுக் கூட்டத்துக்கு வந்த நிதியமைச்சரே கிண்டல்செய்தார். 'என்னைக் கசாப்புக் கடை வைக்கச்சொல்றார் அண்ணாதுரை!" என்று. அதைக் குறிப்பிட்டு, சி. என. ஏ. சொன்னார் "போயும் போயும் உங்களைப் பார்த்தா நான் கசாப்புக்கடை வைக்கச் சொல்வேன்? முதலமைச்சரைப் பார்த்துச் சொன்னாலும், பொருளுண்டு!" என்று. சபையில் சிரிப்பொலி எழுந்தது. நிதியமைச்சரைவிட முதலமைச்சர் உருவந்தானே பொருத்தமாயிருக்கும்!! "ஒரு ஆடு இரண்டு ஆடு வெட்டினால் கசாப்புக்கடை. ஆயிரம் இரண்டாயிரம் என்று வெட்டினால் அது இறைச்சிப், பண்ணை. இப்படி இறைச்சிப் பண்ணைகள் வைத்துப் பல நாடுகள் செல்வம் குவிக்கின்றன" என்று எடுத்துரைத்தார், சி. என். ஏ.

நிதியமைச்சரின் மெலிந்த உருவையும் முதலமைச்சரையும் ஒப்பிட்டு நகைச்சுவை ததும்பக் குறிப்பிட்டார்! ஆங்கிலத்தில் சொல்லப்படும Satire பல இடங்களில் தென்பட்டு, பேச்சில் நகைச்சுவையும் அதோடு நல்ல சாட்டையும் இருந்து கொண்டேயிருந்தது. பிச்சைக் காரன், என்று சொன்னாரல்லவா, முதலமைச்சர்? அதை அடிக்கடி பேச்சின் நடுவே குறிப்பிட்டுக் குறிப்பிட்டு பேசி வந்தார்! "முதலமைச்சர் எங்களைப் பிச்சைக் காரன் என்றாராம். அவர் ஒன்றும் பிரபு அல்ல" என்றார் ஓரிடத்தில். சபையே சிரித்தது. இன்னொரு சமயம், "முதலமைச்சருக்கு இப்படி வாங்கி அப்படிக் கொடுப்பது நன்றாகத் தெரியும்" என்றார், இரு பொருள் தொனிக்க. காமராஜரின் இந்தக் கலையினை அறிந்தவர்கள் தானே அங்கே காங்கிரஸ் M.L.A.க்களாக வந்திருக்கிறார்கள். அதனால் அவர்களும் சேர்ந்துகொண்டு சிரித்தார்கள்!!

பிச்சைக்காரர்கள் யார்? உண்மையில் இந்த அரசுதான் அடிக்கடி, டில்லியை நோக்கி, யாசிக்கிறது. இதையும், விளக்கினார், சி. என். ஏ. இப்படிப் பிச்சைகேட்டு நிற்பதற்குப பதில், நம்முடைய பொருளாதாரத்தை நாமே கவனித்துக்கொள்கிற சூழ்நிலையை உருவாக்கிக்கொள்ள வேண்டுமென்று, யோசனைகளைச் சொன்னார். "இறைச்சிப் பண்ணையால்,

(4-ம் பக்கம் பார்க்க)

# பசிவந்திட!

[மலர் 17] ஆண்டு சந்தா ரூ. 8 [15 3-59] தனிப் பிரதி 16-காசு [இதழ் 35


என்னதான் சொன்னாலும் நமது பசிக்கு வயிறு நிறைந்தால்தான் முடியும்! காங்கிரசும் கம்யூனிஸ்டுகளும், இதைச் சொன்னால் ஒப்புவதில்லை; எல்லோரும் ஒன்றுதான்; அகில இந்தியாவுக்குள் எங்கே என்ன இருந்தால் என்ன, என்பர்!! ஆனால் 'பசி' தங்களாலும் சமாளிக்க முடியாதபோது அவர்களை அறியாமலே, "ஆகா! எங்களுக்கு அது இல்லை; இது இல்லை;" என்று கதறுவர்.

"முதல் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டங்களின் தொழில் வளர்ச்சியில், எங்களுக்குப் போதிய பங்கு தரப்படவில்லை." இது எல்லா மக்களும் தெரிவிக்கும் அதிருப்தியாகும்.'

"மத்திய அரசு, நேரடியாக நிர்வகிக்கும் பொதுத் துறையில் உள்ள பெருங்கனரகத் தொழில்களில் ஒன்றுகூட எங்கள் பகுதியில் இல்லை."

"தனியார் துறையில்கூட, எந்தப் பெருந் தொழிலும் துவக்கப்படவில்லை."

இப்படிக் குமுறியிருக்கிறார்! வேறு யாருமல்ல, கேரளத்து நிதி அமைச்சர்!! வேறு எந்தச் சந்தர்ப்பத்திலுமல்ல, மாநிலத்தின் ஆண்டு நிதிநிலை அறிக்கையைச் சமர்ப்பித்தபோது. நமது நிதியமைச்சர், மத்திய அரசின் ஓரவஞ்சனைகளைப் பூசிமெழுகப் பார்க்கிறார், இங்கே. கேரள நிதி அமைச்சர் அச்சுத மேனன், வெளிப்படையாகக் குமுறலைக் கொட்டியிருக்கிறார்.

கம்யூனிஸ்டானாலும், ஆட்சிப் பொறுப்பில் இருக்கும்போது, நிச்சயம் டில்லியின் சூதுமதி விளங்காமற் போகாது! அதுபோது, எந்தளவுக்கு தம் பகுதி, ஆளும் வடவரால் வஞ்சிக்கப்படுகிறது என்பதனை அறியவே செய்வர்!! அச்சுதமேனன், அந்த ஆத்திரத்துடன்தான், கேரள சட்டமன்றத்தில் பேசி இருக்கிறார்.

ஒவ்வொரு வட்டாரத்திலும் தொழில்கள் பெருக வேண்டும் என்கிற தூய்மையான எண்ணமிருந்தால், தொழில்கள் பரவலாகத் துவங்குமளவில், மத்திய சர்க்கார் செய்யலாம். அதற்கு மனம் இருக்கவேண்டும்! மனமிருந்தால் தானே!!

"இந்தியாவிலேயே சிறந்த களிமண் கேரளத்தில் கிடைக்கிறது; ஆனால் அதிகமான சூடு தாங்கவல்ல மின்சாரச் சாதனங்களை உற்பத்தி செய்வதற்கான தொழிற்சாலை அமைக்க லைசென்சு வழங்கியபோது, டெல்லி அரசு, கேரளத்தில் செய்யுங்கள் என்று சொல்லவில்லை. நமது பேச்சையும் காது கொடுத்துக்கேட்கவில்லை. வடக்கே அமைத்துவிட்டு இங்கேயிருந்து களிமண்ணைக் கேட்கிறார்கள்"

இதுவும் அச்சுதமேனன் வெளியிட்டுள்ள தகவல்தான்! காது கொடுத்துக் கேட்கவில்லை, என்கிறார். ஏன் கேட்கவில்லை? பசியெனும்போது, ஏன் உணவுத்தட்டை வடக்குக்கு மட்டும் நீட்டுகின்றனர்? எனும்போதுதான், "திராவிடம் தனி நாடாக வேண்டும்" என்கிற குரலுக்கு வலிவு உண்டாகிறது.

இதைச்சொல்லும்போது, "ஆ! ஏ! ஆரம்பித்து விட்டான். திராவிடநாடாமே" என்று கூச்சலிட்டு, குட்டுதற்குக் கிளம்புவர். இதோ ஒருவர், திராவிடத்தைப் பற்றிச் சொல்கிறார்:

"திராவிடப் பண்பாடும் திராவிட நாகரிகமும், வடநாட்டிலுள்ள பண்பாடு நாகரிகத்தைக் காட்டிலும் ஆயிரம் மடங்கு உயர்ந்தனவாகும். அந்தத் திராவிடப் பண்பாட்டுணர்ச்சியும், திராவிட நாகரிக உணர்ச்சியுந்தான் நான்கு திராவிடப் பகுதிகளின் மக்களையும் ஒன்றுபடுத்தக்கூடியனவாகும். இந்த அடிப்படையில் திராவிட முன்னேற்றக் கழகம் பணியாற்றி வருவது எனக்கு மிக்க மகிழ்ச்சியாகும்"

இவர் ஒரு சாதாரணர் அல்லர்! மைசூர் உயர் நீதிமன்றத் தலைமை நீதிபதியாக இருந்து அண்மையில் ஓய்வுபெற்ற மேடப்பா அவர்கள் 1—2—59 அன்று நமது பொதுச்செயலாளர் நாவலரைச் சந்தித்து உரையாடியபோது, இவ்வண்ணம் சொல்லியிருக்

கிறார்!! கன்னடத்துத் தலைமை உயர் நீதிபதி, சொல்லுகிறார் திராவிடப் பண்பாடு குறித்து. நான்கு பகுதிகளும் ஒற்றுமை அடையவேண்டும் என்கிறார்.

இந்த உணர்ச்சி, ஒருபோது கேலிசெய்யப்பட்டதுண்டு! இப்போது, உயர்நீதி மன்ற நீதிபதியின் வாயிலிருந்து உதிருகின்றது. தோழர் அச்சுத மேனன், வடக்கின் வஞ்சகம் பற்றிப் பேசுகிறார். இப்படிப்பட்ட ஒற்றுமையுணர்வும், வடக்கின் ஆதிக்கப் போக்கும், உறைக்கஉறைக்க திராவிடமுன்னேற்றக் கழகத்தின் உரிமைக்குரல் வலுவடைகிறது என்பது பொருள்! மறுத்தாலும் மறைத்தாலும், பசி அதிகமாக அதிகமாக, தன்னாலேயே வாய் அலறத் தான் செய்யும்!!

பசி வந்திடப் பற்றும் பறக்கும் என்பார்கள். அதிகாரபீடத்தில் இருந்தாலும் சரி, ஆண்டிக் கோலத்தில் இருந்தாலும், வயிறு காய்கிறதென்றால் அது எதனால்? எப்படி என்பதை அறிய முயற்சி எடுப்பது தானாகவே உண்டாகிவிடும்.

நம்மை ஆள்பவர்களாயிற்றே! நாம் அவர்களுக்கு அடங்கி நடக்கவேண்டியவர்களாயிற்றே! காலால் இட்ட பணியைத் தலையால் ஏற்று நடத்தவேண்டியவர்களாயிற்றே! என்றெல்லாம் எண்ணி வாளா இருக்க முடியாது கூடாது. காரணம், பசி அவ்வளவு பொல்லாதது. தாயைப் பிள்ளை அதட்டுவது ஒரு முறை. பணியாள் தன் எசமானனை அதட்டுவது இன்னொரு முறை. அதுபோலவே, ஆளும் கட்சியை அது இட்ட கோட்டில் நிற்பவர்கள் அதட்டிக் கேட்கும் விதமும் இருக்கிறது. இது, தாயைப் பிள்ளை அதட்டுவதுபோலவோ அல்லது எசமானனை வேலையாள் அதட்டுவது போலவோ இருக்காது. பிள்ளை தன் பசியைப் போக்க மட்டுமே தாயை மிரட்டும், பணியாளனும் அப்படித்தான்; தானும் தன் குடும்பமும் பசி தீரவேண்டுமென்ற தொனியில் கேட்பான்,

ஆனால், ஆளப்படும் கட்சியின் மிரட்டல் அவ்விதமல்ல, நாட்டு மக்கள் அனைவரின் பசியையும் போக்கும் விதத்தில் அந்த மிரட்டுதல் அமையும். அப்போது ஆளுங்கட்சி, தன் அதிகாரத்தைச் செலுத்தி அடக்க முயன்றால், அது எங்குபோய் நிற்கும் என்பதனை, ஆங்காங்கும் நடைபெறும் நிகழ்ச்சிகள் படம் பிடித்துக் காட்டியபடி உள்ளன. இந்த உண்மையை எந்த அரசும் சாதாரணமாக எண்ணிவிட முடியாது—கூடாது.

★

---

2-ம் பக்கத் தொடர்ச்சி

டென்மார்க், நல்ல இலாபம் கண்டு வருகிறது. டென்மார்க், நமது நாட்டைவிட மிகச்சிறிய தேசம். அது, பெறுகிறது. அப்படியிருக்கும்போது நம்மால் முடியாதா?" என்று கேட்டார். தொடர்ந்து, "அங்குள்ள அமைச்சர்களைவிட இங்குள்ளவர்கள் திறமைசாலிகள் இல்லையென்று சொல்லமுடியும்?" என்றும் கேட்டார். எதிரே உட்கார்ந்திருந்த காமராஜர், உடனே, 'இல்லை!' என்றார். அதாவது, 'டென்மார்க்கைப்போல எங்களுக்குத் திறமையில்லை. போதுமா?' என்று கேட்பதுபோல இருந்தது, அந்த 'இல்லை' ஒலித்தவிதம். கிண்டல் என்று நினைத்துத்தான் சொல்லியிருக்க வேண்டும், முதலமைச்சர். அவர்களைவிட எங்களுக்குத் திறமைதான் இல்லை! நீ, என்ன செய்யமுடியும்?—என்று கேட்பதைப்போலவும், ஒலித்தது, குரல். உண்மையில், எனக்கு, 'சுரீர்' என்றது! அலட்சியமே, நிதானு, இங்கே ஜனநாயகக் கடிவாளத்தை ஏந்தியிருக்கிறாய் என்று நினைக்கவும் சொல்லிற்று!

அப்போதுமட்டுமல்ல, தனது பேச்சை முடிக்குமுன் சி. என். ஏ. சொன்னார், "நாட்டிலுள்ள எதிர்க்கட்சிகள் எல்லாம் ஒன்று சேர்ந்து 'தமிழ்நாடு' எனப் பெயர்வைக்குமாறு வேண்டின. அதற்காகவே, முதலமைச்சரின் ஊரில் ஒரு பெரியவர் உண்ணாவிரதமும் இருந்தார். அந்தப் பக்கம் சென்றுவந்த முதலமைச்சர், இன்னும் சாகவில்லையா! இன்னும் சாகவில்லையா! சி. என். ஏ. முடிக்கவில்லை. "அப்படி முதலமைச்சர் கேட்டாரே ஒழிய, உண்ணாவிரதத்தை நிறுத்தும்படி சொல்லவில்லை" என்று. காமராஜருக்கு அவசரம் தாங்க முடியவில்லை. படாரென்று "அவரு செத்துவிட்டார்!" என்றார். சி. என். ஏ-வுக்கு அவர் செத்தது தெரியாது என்கிற இழவுச் செய்தியைச் சொல்லுவதுபோலவும் ஒலித்தது. அவர் சொன்னது! அந்த உத்தமப்பெரியவரின் உயிர் போனாலென்ன? அது ஒரு பெரிய விஷயமா, என்று அலட்சியத்தைக் காட்டுவதுபோலவும் ஒலித்தது! உண்மையில், ஏனிப்படி முதலமைச்சர், தன் உருவத்தை வெளிப்படுத்திக்கொள்கிறார் — எரிச்சலிலா அல்லது நமக்கு அவர் குரல்வலியைக் காட்டிக்கொள்ள விரும்புகிறாரா என்றெல்லாம் எண்ணினேன். எதுவாயினும், அவர் கூற்று, ஜனநாயகம் சகிக்காத ஒன்று!

முதலமைச்சர்; இடையிடையே, இதுபோல் ஒன்றிரண்டு சொன்னாலும், சி. என். ஏ. பேசுகிறவரையிருந்து கேட்டார். பிறகு, அவரது கட்சியைச் சேர்ந்த ஒரு சிலரும் பேசினார்கள். அவர், சபையில் இல்லை! நிதியமைச்சர் பதிலளிக்கும்போதும் இல்லை. விவாதத்துக்கு, கடந்த ஆண்டு நிதியமைச்சர், பதிலளித்தபோதும் போயிருந்தேன். அப்பப்பா! நமது கழக வரலாற்றையும், நாம் அவ்வப்போது வெளியிட்ட கருத்துக்களையும், நூல்களையும் அடுக்கியெடுத்துக் கொண்டுவந்து, தாக்குத் தாக்கென்று தாக்கினார். தி. மு. க. யார் தெரியுமா? இவர்கள் ஜஸ்டிஸ்கட்சியாகயிருந்தவர்கள்! திராவிட கழகமாக இருந்தவர்கள்! இதற்கு முன்னால் சுயமரியாதைக் கழகமாகயிருந்தவர்கள்! வெள்ளைய

(16-ம் பக்கம் பார்க்க)

# இன்றைய குழந்தை நாளைய மனிதன்!

[ அன்பு ]

மண்ணுலகத் துன்பங்கள் அனைத்தையும் ஏற்று ஓர் குழந்தையை ஈனுகின்றாள் ஒரு தாய். குழந்தை கருவிலிருந்து வந்ததும் வராததுமாய் 'அம்மா' என்ற ஒலியுடன் பீறிட்டழுகிறது. பாலோடு அன்பும் கலந்து ஊட்டப்படுகிறது அக்குழந்தை.

ஓய்ந்த நேரங்களில் 'அம்மா', 'அப்பா' போன்ற சொற்களைச் சொல்லிப் பழக்குகிறாள் தாய். குழந்தையும் தனது மழலையால் சொல்லமுதங்களைச் சிதறவைக்கிறது. நாட்கள் செல்லுகின்றன. குழந்தை தவழ்வதினின்றும் எழுந்து தள்ளாடி நடக்க ஆரம்பிக்கிறது. நடைவண்டி கொடுத்து நடை கற்பிக்கிறாள் தாய். குழந்தை பெரியவனாகிறான். மொழி பேசுகிறான்; செயல் புரிகிறான்.

ஆனால் பிள்ளைப்பேறே அடையாத ஒரு மலடி அத்தாயிடம் வந்து, ஏதேதோ பொறாமை உள்ளத்தினால் உளறுகிறாள்: 'அதிசயமே! குழந்தை ஒரு வயது கூட நிரம்பப் பெறவில்லை! அதற்குள் அதனிடம் பேச்சுக்கொடுத்து வாயைப் பெருக்கவைக்கிறாயே'... குழந்தை இரண்டு வயதுகூட ஆகவில்லை; அதற்குள் நடைவண்டி கொடுத்து நடக்கவைக்கிறாயே! கால்கள் வளர்ச்சி குன்றிவிடாதோ? பேசாமல் விட்டுவிடேன். ஏழு, எட்டுவயதானால் தானாகப் பேசிக்கொள்கிறான்; தானாக நடந்துகொள்கிறான்''

இதைக் கேட்டால் அத்தாய் என்ன நினைப்பாள். "அம்மா", "அப்பா" என்ற மொழியின்மூலத்தைத்தானே கற்றுக்கொடுக்கிறேன்; பெரியவர்களைப் போன்று பேசக் கற்றுக்கொடுக்கிறேனா? நடப்பது எப்படி என்பதைத்தானே கற்றுத்தருகிறேன்; இரண்டு மைல் ஓடிவா என்று கூறித் துரத்துகிறேனா? சிறிது சிறிதாக நாம் பேசுவதைக் கவனித்து வந்தால்தானே, வயதான பிறகு தானாகப் பேசும் தகுதியடைவான்! சிறிது சிறிதாக நாம் நடை வண்டி கொடுத்து நடை பழக்கினால்தானே அவன் தக்க பலம் வந்தவுடன் தானாக நடக்க ஆரம்பிப்பான்! அதை விடுத்து தக்க வயது வந்தவுடன் தானாகப் பேசுவான், தானாக நடப்பான் என்று நமது சூழல்களினின்றும் அப்பாற்பட்டு ஒரு குழந்தையை வளர்த்துப் பார்த்தால் அக்குழந்தை எப்படியெப்படி எல்லாம் ஊர்ந்து நகருமோ, ஓடி விழுமோ? எந்தெந்த மிருகங்களைப் போன்றெல்லாம் கதறிக் கர்ஜிக்குமோ? இதைக்கூட அறியாமல் இருக்கிறாயே பேதைப் பெண்ணே! நீ வளர்ந்தது எப்படி என்பதைச் சற்றே எண்ணிப்பாரேன்!'' என்று நினைத்துத்தான் அத்தாய் அம்மலடியை நோக்கி ஏளனச் சிரிப்பு சிரிப்பாள்.

சற்றேறக்குறைய இந்த நிலைதான் இன்றைய ஆளுங்கட்சியினர்க்கும்—மாணவர்களுக்கும்—அரசியல் தலைவர்களுக்குமிடையே இருந்து வருகிறது. சமீபகாலமாக எந்த ஆளுங்கட்சி, மந்திரிகளையும் உறுப்பினர்களையும் எடுத்துக்கொண்டாலும், ஒருவராவது, "மாணவர்களே அரசியலில் ஈடுபடாதீர்கள்; அது இப்போது உங்களுக்கு வேண்டாம்'' என்று கூட்டத்தின் முதலிலும் முடிவிலும் கூறத் தவறுவதில்லை. இதற்கு அடிப்படைக் காரணம், மாணவர்கள் தங்கள் மீது கடைக்கண் பார்வையையும் திருப்புவதில்லை என்ற ஒரே காரணம்தான்.

தாய், குழந்தைக்கு மொழிபேசக் கற்றுக்கொடுப்பது பெரும் சொற்பொழிவாற்றக் கற்றுக்கொடுப்பதுபோல், தாய் குழந்தைக்கு நடை பழகக் கற்றுக்கொடுப்பது ஓடக் கற்றுக்கொடுப்பதுபோல் மலடியின் கனிவில்லாக் கண்களுக்குத் தோன்றுகிறது. அதனால்தான 'அம்மா' என்று மழலைமொழியில் சொல்லும் குழந்தையை நோக்கிப் பாடாதே என்கிறாள்; நடை கற்றுக்கொள்ள ஆரம்பிக்கும் குழந்தையை நோக்கி குழந்தையே ஓடாதே என்கிறாள்! அதோடு நில்லாமல் தாய்மார்களையெல்லாம் ஒன்றுகூட்டி "ஐயோ! குழந்தைகளை 'சளசள' வென்று பேசவிடாதீர்கள், 'குடுகுடு' வென்று ஓடவிடாதீர்கள் என்று 'அறிவுரை' வேறு தருகிறாள்.

இதே போலத்தான் அரசியலாரும் மற்றும் சிலரும் அரசியல் உண்மைகளைக் கற்றுக்கொள்ளும் மாணவர்களிடம்போய், 'மாணவர்களே அரசியலில் ஈடுபடாதீர்கள்' என்கிறார்கள். மாணவர்கள் நாட்டின் நிகழ்கால அரசியலை அறிந்துகொள்ளப், பாடபுத்தகங்களாக மட்டுமே விளங்கும் அரசியல் தலைவர்களிடம் போய், மாணவர்களை அரசியலுக்கு இழுக்காதீர்கள் என்று திரும்பத் திரும்பக் கூறுகிறார்கள்.

நடிப்புக்கலையில் முயற்சிசெய்து தோல்வி ஒன்றையே கண்ட ஒருவன் நாடக மன்றத்தின் முன் நின்றுகொண்டு நாடகம் பார்க்க மட்டுமே வந்த மக்களை நோக்கி "மக்களே நடிப்பில் ஈடுபடாதீர்கள்! நாடகக்காரனாக மாறாதீர்கள்'' என்று கூறினால் மக்கள் அவனைப் பற்றி என்ன நினைப்பார்கள்?

அதுபோல அரசியலைக் கவனித்து 'பார்வை அனுபவம்' பெறும் மாணவர்களை நோக்கி 'மாணவர்களே அரசியலில் ஈடுபடாதீர்கள்' என்று குரலெழுப்புகிறார்கள். ஆரம்ப வகுப்பு முதல் கல்லூரி வகுபபு முடிய சாப்ராஜ்யங்களின் தோற்றம் — அழிவு, சர்வாதிகாரிகளின் வீழ்ச்சி, ஜனநாயகம், அரசியல் கட்சிகள் போன்றவற்றையெல்லாம் தங்கள் பாடப்பகுதிகளில் ஒன்றாக வைத்துப் படித்துவரும் மாணவர்களிடம் "மாணவர்களே உங்களுக்கு அரசியல் வேண்டாம்'' என்கிறார்கள். புதுமையிலும் புதுமை!

இக் கூக்குரலினால் சிற்சில இடங்களில் மாணவர்கள் அரசியல் நிகழ்ச்சிகளைப் பார்ப்பதும், படித்து அறிந்துகொள்வதும் தவறு என்று அடக்கி ஒடுக்கி நடத்தப்படுகிறார்கள். இன்றைய குஞ்சுகள் நாளைய பறவைகள்! இன்றைய குழந்தை நாளைய மனிதன்! இந்த அடிப்படை உண்மைகூட அறியாத மனிதர்களா இத்தகையவர்கள்? நாளைய அரசை ஏற்றுநடத்தப் போகிறவர்கள் இன்றைய மாணவர்கள்தானே!

இன்றைய அரசியலில் பார்வை அனுபவம் இல்லாத அவர்களால் நாளைய அரசியல் பொறுப்பை எவ்வாறு ஏற்று நடத்த முடியும்? சிறுவயது முதல் ஒரு திருமண நிகழ்ச்சிகளில் கூடக் கலந்து கொள்ளாமலோ, கேட்டு அறிந்து கொள்ளாமலோ இருக்கும் ஒருவன் தன் திருமணத்தில், தான் எப்படி நடந்துகொள்ளவேண்டும் என்று அறியாத அப்பாவியாகத் தானே இருப்பான்?

மகன் தக்க வயது வந்தவனாகி விட்டதை அறிந்த தந்தை, அவனை மெல்ல மெல்லத் தனது காரியத்தில் ஈடுபடுத்திப் பழக்குவிப்பார். பெட்டிச் சாவியைக் கொடுத்துப் பணம் இவ்வளவு எடுத்து வா என்பார். கணக்கு எவ்வளவு ஆயிற்று என்று பார் எனக் கேட்பார். நாலு பேரிடம் உட்கார்ந்து பொது விவகாரங்கள் பேசும் போது மகனையும் அருகில் உட்காரவைத்துக்கொண்டு பேசுவார். ஆனாலும் எல்லாவற்றுக்குமே அவனை முழுப் பொறுப்பாளியாக்கிவிட்டுத், தான் விலகிக் கொள்ளமாட்டார். அதற்கென்று தக்க பருவம் வரும்வரை தானும் துணை நின்று அவனைப் பழக்குவிப்பார். இத்தகைய ஓர் சிறந்த அனுபவத்தால் தான் அவன் பிற்காலத்தில் தனித்து நின்று குடும்பச் செயல்களைச் செய்யும் துணிவும் அனுபவமும் பெறுகிறான். இதனை விடுத்து, மகனை 25-வயதுவரை குடும்ப விவகாரங்கள் ஓர் சிறிதும் அறியாதவனாக வளர்த்துவிட்டு, திடீரென்று ஒரு நாள் அவனை அழைத்து இனி நீ தான் குடும்பப் பொறுப்பேற்க வேண்டும், ஏற்றுக்கொள் என்று சொல்லி அவனிடம் ஒப்படைத்தால், அவன் நடத்துவது குடும்பமாகவா இருக்கும்?

மாணவர்கள் அரசியலில் வெறும் 'பார்வை அறிவு' மட்டும் பெறுவது சிலருக்கு அவர்கள் அரசியலிலேயே ஈடுபட்டுப் போராட்டம் நடத்துவதுபோன்று தோன்றுகிறது. அது அவர்களது பார்வைக் குற்றமே தவிர, பார்க்கப்படும் பொருளின்மீதல்ல. நாட்டில் இன்று என்ன நடக்கிறது என்று தெரியாத மாணவர்கள் நாளைய அரசியலை எவ்வாறு அங்கம் வகித்து நடத்த முடியும்?

நாடகத்தைப் பார்க்கச் செல்பவர்களையெல்லாம் நடிகர்கள் "நீ அவசியம் நாடக நடிகனாக வர வேண்டும்" என்று கூறமாட்டார்கள், ஏனெனில் அவர்களுக்கு நடிப்பதற்கேற்ற அனுபவம் கிடையாது என்பது தெரியும். நாடகம் பார்க்கச் செல்பவர்கள் எல்லோரும் நடிகனாக ஆகிவிட முடியாது. ஆனால் நாடகம் என்றால் என்ன என்று தெரியாத ஒருவனும் நடிகனாக ஆகமுடியாது. அவன் பலநாள் நாடகம் பார்த்து அனுபவ அறிவு பெற்றால்தான் ஒருநாள் நாடக நடிகனாகத் தோன்றிச் செயல் திறனைக் காட்ட முடியும். உலகில் நாடகம் பார்க்கும் மிகப் பெரும்பான்மையினருள் மிகச் சிறுபான்மையினர்தான் நாடக நடிகனாக மாறுகிறார்கள்.

அரசியலைக் கூர்ந்து கவனித்து, பார்வை அனுபவமும், அறிவும் பெறும் மாணவர்களை "நீங்களெல்லோரும் அவசியம் அரசியல் விவகாரங்களில் செயலளவில் ஈடுபடத்தான் வேண்டும்" என்று இதுவரை எந்த அரசியல் வாதியும் அழைத்ததில்லை—அழைக்கவும் மாட்டார்கள். ஏனெனில் அவர்களுக்கு, மாணவர்கள், செயலளவில் ஈடுபடத்தக்க பருவத்தினர் அல்லர் என்பது தெரியும். அரசியலைக் கவனித்து வருபவர்கள் எல்லோரும் அரசியல் வாதியாக மாறிவிட முடியாது. ஆனால் அரசியலைக் கவனித்துப் பார்வை அறிவு பெறாத எவரும் திடீரென்று ஒருநாள் உண்மை அரசியல் வாதியாக மாற முடியாது. அரசியலில் பல நாள் பார்வை அனுபவம் இருந்தால்தான் தக்க தருணம் வரும்போது செயலில் ஈடுபட முடியும். உலகில் அரசியலைப்பற்றித் தெரிந்திருக்கும் மிகப்பலருள் மிகச் சிலர்தான் அரசியலில் நேரடி நடவடிக்கைகளில் பங்கு கொள்கிறார்கள்.

இன்று மக்களால் மிகச் சிறந்த அரசியல்வாதி என்று போற்றப்படுபவர்களெல்லாம் தங்கள் மாணவப் பருவத்தில் அரசியலில் பார்வை அறிவைப் பெற்றவர்கள் தான். அப்படித், தக்க பார்வை அறிவு இல்லாமல் திடீரென்று அரசியலில் குதித்தவர்கள், எல்லாத் தகுதிகளையும் உடையவராக இருப்பர் என்று கூறச் சிறு சான்றுகூடக் கிடையாது.

அரசியல் என்றால் என்ன என்று தெரியாமல் மாணவப் பருவத்திலிருந்து வெளி வருபவர்களை வைத்துக்கொண்டு என்ன செய்யப் போகிறது இந்நாடு?

"மாணவர்களே அரசியல் உங்களுக்கு வேண்டாம்" என்று கூறுபவர்களாலேயே விளக்கிச் சொல்ல முடியாத இக்குரல் நாட்டில் அடிக்கடி எழுந்துகொண்டு வருகிறது. மாணவர்கள் அரசியலை அறிந்துகொண்டு வருவது இத்தகையவர்களுக்கு செயலில் ஈடுபடுவதுபோல் தோன்றுகிறது. இவர்கள் கண்கள் வேண்டுமானால் "இருண்டவன் கண்களுக்கு........" என்ற பழமொழிக்கு ஒப்பாக இருக்கலாம்! மேலும், இவர்களது கூக்குரல் மையப்புள்ளி இல்லாமல் வட்டம் வரையலாம் என்ற கேலிக்குரிய கூற்றிற்கு ஒப்பாகிறது. மையப் புள்ளி இல்லாமல் வட்டம் வரையலாம்; ஆனால் அது ஒழுங்கான வட்டமாக இருக்காது. அது போலத்தான் அரசியலில் பார்வையறிவு இல்லாமல் செயலறிவு வரும் என்று கூறுவதும். பார்வை அறிவு இல்லாமல் அரசியல் இயந்திரத்தைப் பிடித்தவர்கள் அதைத் தாறுமாறாகத்தான் ஓட்டுவார்கள். அது நாட்டுக்கும் கேடு, மக்களுக்கும் கேடு.

மையப் புள்ளியை எடுத்துக்கொண்ட பின்னரே தான் வட்டம் வரைய வேண்டும். அதுபோல் மாணவர்கள் இப்போது அரசியலில் பார்வையாளர்களாக இருந்து பார்வை அறிவு மட்டுமே பெறுகிறார்கள்; பெற முயற்சிக்கிறார்கள். இதுதான சிலருக்குத் தவறாகத் தோன்றுகிறது.

ஆனால் ஒன்றுமட்டும் உண்மை: "மாணவர்களே அரசியல் உங்களுக்கு வேண்டாம்" என்று தெரிந்தோ தெரியாமலோ சிலர் கூறும் இக்கூற்றால் சில மாணவர்கள் 'நமக்கு இந்த வீண் வம்பு ஏன்' என்று தங்களுக்கும் அரசியல் உலகுக்குமிடையே கடக்கமுடியாத நீண்ட ஒரு பள்ளத்தை உண்டாக்கிக் கொண்டு ஒதுங்கி வாழ விரும்புகிறார்கள்—வாழ்ந்தும் வருகிறார்கள், இத்தகைய மாணவர்கள், தங்கள் எதிர்காலத்தைக் கிணற்றுத் தவளையின் நிலைக்குத் தான் கொண்டு போகிறார்கள் என்று கூறவேண்டியிருக்கிறது.

# முன்னுக்குப்பின்..!

—[சிலம்பன்]—

நாளிதழ் ஒன்றைப் புரட்டிக் கொண்டிருந்தேன். அடுத்தடுத்து அமைந்த இரு செய்திகள் என் கருத்தைக் கவர்ந்தன.

சென்னை மாநிலத்தில் தொழில் வளர்ச்சி பற்றி மாநில அமைச்சர் இருவர் தங்களது கருத்தினைத் தெளிவாக்கியிருந்தனர்.

ஒருவர் சென்னை நகரினில் பேசியிருந்தார். மற்றவர் செங்கற்பட்டு மாவட்டத்தில் திருவாய் மலர்ந்திருந்தார்.

தஞ்சை தந்த சிலர் ஒருவர். கோவைக் குறுளர் மற்றவர்.

முதல்வர் பேசியது கிண்டியில் அமைந்த தொழிற் பண்ணையில், மத்திய அமைச்சரும், மாநில அமைச்சர்களும் கூடியிருந்திடும் பெருமிதமான சூழ்நிலையில். மற்றவர் பேசியதோ, மண்டலக் காங்கிரசுப் பொதுக்கூட்டத்தில் தி. மு. கவினை ஒருபிடி பிடித்து விட வேண்டுமென்ற ஆவேசமான சூழ்நிலையில். செய்திகளைக் கீழே தருகிறேன்.

"தொழில் வளர்ச்சியில் சென்னை மாநிலம் பின்னடைந்திருந்தாலும், இம் மாநிலத்தில் உள்ள தொழிலாளர்கள் மிகவும் திறமைவாய்ந்தவர்கள். நிதியுதவி மட்டும் தாராளமாக இந்திய அரசு அளிக்குமானால், இங்கு சிறு தொழில்கள் அமோகமாக வளர்ந்து விடும்"—தொழில் அமைச்சர் வெங்கட்ராமன்.

"மற்ற மாநிலங்களைப்போல சென்னை மாநிலத்தில் ஒவ்வொரு துறையிலும் முன்னேற்றம் ஏற்பட்டிருக்கின்றது......தொழில் வளர்ச்சியிலும் சென்னை நன்கு முன்னேறி இருக்கின்றது"—நிதியமைச்சர் சுப்ரமணியம்.

மதுரையிலிருந்து வெளிவரும் தமிழ்நாடு என்னும் நாளிதழ் இந்த இரு செய்திகளையும் தருகின்றது.

தொழில் அமைச்சர் சென்னை பின் தங்கிக் கிடக்கின்றதெனச் சிந்தை நொந்து பேசிடக் காண்கின்றோம். வாய்ப்பிருந்தும் வளர்ச்சிபெற முடியாத சோக நிலையினில் சிறு தொழில்கள் உள்ள நிலைகண்டு துயரம் வேலாகத் துளைத்திட வேதனையால் முனகுதலை உணர்கின்றோம். திறமைவாய்ந்த தொழிலாளர்கள் இருந்தும் டெல்லியின் தயவில்லாத காரணத்தால், மாநிலத்தின் தொழில் வளர்ச்சிக்கு அவர்களைப் பயன்படுத்த முடியாது அமைச்சர் இடர்ப்படுவது தெளிவாகத் தெரிகின்றது. 'நிதி உதவி மட்டும் தாராளமாகக் கிடைத்துவிட்டால் ...ஆகா! தமிழகத்தைத் தொழிலகமாக மாற்றிவிட முடியாதா?' இப்படிக் கனவு காணும்போதே அவர் கண்களின் ஆர்வம் ஒளிவிட்டு மின்னுவதைப் புரிந்து கொள்ள முடிகின்றது நம்மால்.

அது மட்டுமல்ல.

அமைச்சர் பேசும்போது டெல்லிமூலவர்க்குக் கோபம் ஏதும் பிறந்திடுமோ, குற்றம் அதனால் விளைந்திடுமோ என்ற அச்சத்தோடு குரலிலே யாழினைக்கூட்டி, அதோடுகூடக் கொஞ்சம் தேனையும் குழைத்துப் பயபக்தியோடு தான் பொருளுதவி கேட்டிருக்கின்றார். நாம் கூறுவதைப் போன்று அதட்டி மிரட்டி எங்களது பங்கினை எடுத்துவை கீழே என்று உரிமையோடு கேட்க முடியவில்லை. தெளிவாக உணர்ந்துகொள்கின்றோம் நாம்.

நிதியமைச்சர் பேச்சிலோ 'சென்னை பின்தங்கிக் கிடக்கின்றது' என்ற பிரச்சினையை எப்படியாவது பூசி மெழுகிவிட்டால் போதும் எனத் தவித்திடும் தவிப்புத் தெற்றெனப் புரிகின்றது. 'எல்லாத் துறையிலும்' என்பதிலுள்ள உண்மையும் 'தொழிற் துறையில்' என்பதிலுள்ள உண்மையும் அக்கருத்தினை நமக்குத் தெளிவாக்கத் தவறவில்லை. எனினும் அமைச்சரோ, ஏதோ பிலாயோடு போட்டியிடக்கூடிய போராலைகளும், 'சிந்திரி'யை முந்திடத்தக்க தொழிற்கூடங்களும் தேவைக்கு அதிகமாக இங்கு குவிந்துகிடப்பதைப்போல எண்ணிக்கொண்டு பேசியிருக்கின்றார். 'வடக்கு வாழ்கின்றது தெற்குத் தேய்கின்றது' எனப் பேசிடும் தி. மு. க.வினரை ஒரு விளாசு விளாசிவிட்டோம் என்ற மிதப்புக் காணப்படுகின்றது அவரது பேச்சில்.

ஒன்றுக்கொன்று முரண்பட்ட கருத்துக்கள்.

ஓர் அமைச்சரின் நெஞ்சிலே தொழில் வளர்ச்சி பெற முடியவில்லையே என்ற ஏக்கம் வழிந்திடவும், மற்றவரின் நெஞ்சிலே பின் தங்கிக் கிடக்கின்றோம் எனப் பேசிடுவோர் தமக்கு வாய்ப்பூட்டுப் போட வேண்டுமென்ற எக்காளம் பொங்கிடவும் காண்கின்றோம்.

இந்த இரு செய்திகளையும் படிக்கும் மக்கள் என்ன நினைப்பர்? தொழிலமைச்சர் பேசிய கருத்தினைக் கண்டித்து, நிதியமைச்சர் உண்மை நிலையினைப் படம் பிடித்துக் காட்டியிருக்கின்றார் என்றுகூட எண்ணத் தோன்றும். ஆனால் உண்மை அதுவல்ல.

தொழில் அமைச்சர் பேசிய அன்று அதே மேடையில் நிதியமைச்சரும் பேசியிருக்கின்றார்.

'செச்சே நீங்கள் சொல்வது சுத்தத்தப்பு. சென்னை ஒன்றும்

தொழில் துறையில் பின் தங்கிக் கிடக்கவில்லை என மறுத்துரைத்து விளக்கம் தரவில்லை நிதியமைச்சர். மாறாகத் தொழிலமைச்சரின் இந்தக் கருத்துக்கு ஒத்துப்பாடியிருக்கின்றார். 'மாநிலத்தினில் யாம் விழைந்திடும் தொழிற்கூடங்கள் அனைத்தையும் நிறுவிவிட்டால் மத்திய அமைச்சுக் குழுவில் சென்னைக்கு இடமே வேண்டாம் எனச் சமரசம் பேசியுமிருக்கின்றார்.

இப்படிப் பேசியவர்தான் இரண்டு நாள் கழிந்ததும் வேறு விதமாக வீறு பேசிடுகின்றார்.

வீட்டுக்குள்ளே மனைவி துரத்திப் பழைய முறத்தால் ஆராதனை செய்தபோது கூனிக் குறுகிக் கிடந்துவிட்டு, கதவைத் திறந்து வெளியே வந்ததும் கூடியிருந்தோரிடம் கூறினானும், 'நொண்டிக் கழுதை எதிர்த்துப் பேசுகிறாள். நொருக்கிவிட்டேன் நொருக்கி' என்று. அப்படித்தான் இருக்கிறது அமைச்சர் பேசிடும் வீரமும்.

பின்னணியில் கிடக்கின்றது என்று சக அமைச்சர் கூறிய போது பேசாமடந்தையாக வீற்றிருந்த அமைச்சர் திலகம் பிறிதோரிடத்தில் வீரம் பேசுவானேன்?

ஒன்று புரிகிறது நமக்கு.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் வளர்ச்சி அவர்களது உள்ளத்தில் கனலாகத் தகிக்கின்றது. அந்தக் கனல் எழுப்பும் சூட்டினைத் தாங்க முடியாதவர்கள், என்ன பேசுகின்றோம்? எங்கே பேசுகின்றோம்? என்றுகூட எண்ணிப் பாராது முன்னுக்குப் பின் முரணாகவே முழக்கம் எழுப்புகின்றனர்.

★

இரக்கமுள்ள நெஞ்சில் அன்பு பிறக்கும்; நாணமுள்ள நெஞ்சில் அறம் பிறக்கும்; நன்மை தீமை தெரியும் நெஞ்சில் மெய்யுணர்வு பிறக்கும்; ஆணவமில்லாத நெஞ்சில் மரியாதை பிறக்கும்.

# சமூகக் கைதிகள்

—[பி. எஸ். மணி]—

இரண்டு ஐந்தாண்டுத் திட்டங்களைத் தீட்டி, நாட்களைத் தாண்டிச் செல்லும் அரசாங்க நடவடிக்கைகளைக் நாணும் போது, நாம் யாரோ, ஆளுபவர்கள் யாரோ, என்ற எண்ணம்தான் மனதில் தோன்றுகின்றது. உலகிலேயே கல்வியின் மதிப்பு, கடவுள் மதிப்பைவிடப் பதின்மடங்கு உயர்ந்தது என்பதை, அறிஞர்கள் கூறக்கேட்டிருக்கின்றோம். இதை உணராமல் அரசோச்சுவோர் கல்வியைப்பரப்பும் ஆசிரியர்களின் விஷயத்தில் விஷமச் சிரிப்பும், வேதனைத் திட்டமும் தீட்டுவது நாட்டிற்கே அழிவுகாலம் என்றுதான் பொருள்படும்.

குறிப்பாகத் தென் நாட்டின் ஆரம்ப ஆசிரியர்களின் நிலைமை அபாயகரமானதாகும். ஈராண்டு ஆசிரியப் பயிற்சிபெற்று, வெற்றி பெறும் ஒருவர் வேலைதேடி, அதில் நம்பிக்கையோடு உழைக்க மனமில்லாமல் போகிறது. மனிதனாகப் பிறந்து, வசதிக்கேற்ப ஓரளவு கல்வியறிவுபெற்று, கஷ்ட நஷ்டங்களுக்கு ஆளாகி, இனியாவது ஒழுங்காகக் காலந்தள்ளலாமென நினைத்துப் பணியாற்ற முற்பட்டால்...... ஆரம்பமே கடூரமான வாழ்க்கைதான்.

ஒரு ஆரம்ப ஆசிரியர் வேலை தேடிக் கண்டுபிடிப்பது குதிரைக் கொம்பாகும். காரணம், ஆசிரியர்பால் அரசாங்கம் கொண்டுள்ள அக்கறை அரைகுறை அக்கறையாகும். இரு வருடங்கள் பயிற்சி பெற்று, வேலைக்கமர்வது... அப்படியே அரசாங்கக் கட்டளைப்படி "எம்ப்ளாய்மெண்டில் ரிஜிஸ்டர்" செய்துவைத்தால், எப்பொழுதாவது, ஏதாவதொரு பட்டிதொட்டிகளுக்கு ஆர்டர் அனுப்புவார்கள், அங்கு சென்றோமேயானால்...... பாவம் ஆசிரியர்படும்பாடு சொல்லி முடியாது. குடியிருப்பு, தண்ணீர், தபால் போக்குவரத்து, தினஇதழ் வாசிப்புக் கொடுமை, இத்தனையையும் பொருட்படுத்தாமல் வேலைசெய்தாலும், நிலைமை எப்படியென்றால், பண்டையகால திண்ணைப் பாடசாலைகள் எவ்வளவோ மேலென எண்ண இடமிருக்கிறது. இதற்கெல்லாம் முழுக் காரணம், மூவர்ணக் கொடிபோட்டு வலம் வரும் உலகமறியா அமைச்சர்களாவார்கள். அதுவும் ஏழைகள் மீது இரக்க குணம் காட்டப் பிறந்தவர்கள் காங்கிரஸ்காரர்களாகிய நாங்கள்தான், வேறுயாருமேகிடையாது என்று தேர்தல் காலங்களில் மார்தட்டி வரும் மகாத்மாக்களின் சீடர்கள்தான் இந்த இழிவான வாழ்க்கைக்கு காரண கர்த்தாக்கள். அவர்களின் கையையும், காலையும் பிடித்து பள்ளிகளில் வேலைக்கு அமர்ந்தால், அங்கு குடியிருப்போருக்கு ஓசில் ஏதாவது — அதாவது ஓரளவாவது செய்ய வேண்டும், இல்லையேல், இல்லைத்தான். பின்னர் 'நீ இன்ன பள்ளிக்கு வேலைக்குப் போ'' என்று நாயைவிடக் கேவலமாகக் கூறும் அவர்களின் வாயைமூட ஏதாவது கொடுக்கவேண்டும். தப்பித் தவறி அதையும் கொடுத்துச் சென்றோமானால், அஜாக் கிழடாய் அமர்ந்திருப்பார் அந்தப் பள்ளித் தலைமை ஆசிரியர், அவர் ஆதிகாலத்தில் "ட்ரெய்னிங்" படிக்காத இலவச ஆசிரியர். அவர் கூறுவார், "என்ன ஓய்... நீர்தான் புது ஆசானோ?... வாரும் வாரும், யாரைப் புடிச்சு நோனீங் சிர்?... இல்லேன்னா இங்கே வர முடியாதுங்காணும்"... என்பார். இத்தனைக்கும் பொறுத்து, நிதானமாக... "ஆமாங்க, நம்பவர்டுமெம்பர் நமச்சிவாயனைப் புடிச்சி..." "ஓகோ அவரா ரொம்பத் தங்கமான மனுசன் போங்கோ, அவர்

(11-ம் பக்கம் பார்க்க)

# அரசபாரம்

—[ அரூர்ச் செல்வன் ]—

"உடம்பே பார"மென்கிறான் மனிதன். "குடும்ப பாரத்தைச் சுமப்பதென்றால்...! அப்பப்பப! அது சாமானியப்பட்டதா? சமுத்திரமல்லவா...!" என்று பெருமூச்சுவிடுகிறார்கள் வாழ்க்கைச் சுழலில் சிக்கியவர்கள். இப்படி ஓரிரு, அல்லது ஐந்தாறு மக்கள், ஒரு மனைவி, பாட்டி, பாட்டன் இவர்கள் அடங்கிய சிறு குடும்பத்தையே பெரிய பாரமென்று சொல்லுகிறார்கள். ஆனால் இத்தகையோர் அடங்கும பல குடும்பங்களைக்கொண்ட ஒரு ஊர்—இப்படி பல ஊர்களைக்கொண்ட பாளையம், குறுநிலம், நாடு என்று இருந்த நிலங்களது ஆட்சிப் பாரத்தைத் தாங்கிய அரசர்களது மனோநிலையை, அவர்கள் பட்ட வேதனைகளைச் சற்று எண்ணிப் பார்ப்போமானால்! இதனால்தானோ சேரநாட்டு இளவல, சிலப்பின் செல்வர் இளங்கோவடிகள் "இந்த அரச பாரமே வேண்டா" மென்று இளமையிலேயே துறவியாகிவிட்டாரோ என்று சற்று ஐயப்படவேண்டி இருக்கிறது.

ஆனால் வாழ்க்கையே இன்ப ஓடம், இனிக்கும் பூங்கா, இலவம் பஞ்சும், செம்பஞ்சும், மயிற்பீலியும்கொண்டு ஆக்கிய பட்டு விரித்த மெத்தை. சோடிக்காளை பூட்டி "சல்சல்" என்று ஓடும் வண்டி என்றெல்லாம் வர்ணிக்கும் போதுதான், துறவி விஸ்வாமித்திரன் — பெண்களை நெஞ்சிலும் நினைக்கக் கூடாதவன் — மேனகையின் மெருகு மேனியிலே —மின்னல் பார்வையிலே — கன்னல் பேச்சிலே மயங்கினானே? என்ற நம் உள்ளமெனும் கேள்விப் பெட்டிக்கு, சந்தேகமெனும் அஞ்சல் செல்கிறது.

இப்படித் தனிப்பட்ட மனிதனது பிரச்சினை, வாழ்க்கைப் பிரச்சனையாகி— அதுபின் வாழுங்குடிகளடங்கிய மக்களது பிரச்சினையாகி—மக்களை ஆளும் அரசியல் பிரச்சினையாகி நிற்கின்ற நேரத்தில்தான், ஒரு தனிப்பட்டவனின் குடும்ப பாரத்தையும், ஒரு தனிப்பட்டவனின் அரசியல் பாரத்தையும் — எடைபோட்டுத் தெரிந்து கொள்ளாமலேயே, வாய்பிளக்கிறது — நம் புருவம் மேலே ஏறுகிறது! இரண்டு மனிதர்களில் ஒருவன் 100-பவுண்டு இரும்புக் குண்டையும், மற்றவன் 800-பவுண்டு குண்டையும் தூக்குகின்றார்கள் என்று நினைக்கும்போது மிகையான பளு தூக்கும் மனிதனது திறமையை — அவன் செயலைக் கண்டு வியப்படையத்தான் செய்கிறது. நாம் மட்டுமென்ன, ஈராயிரம் ஆண்டுகட்கு முன்பே, பல மூதறிவாளர் நிறைந்துள்ள குழு ஒன்றிலேயே இந்த அரச முறையின் இயல்புப்பற்றிய பிரச்சினை எழுந்திருக்கின்றது! விரிந்த உலகம் மன்னனை உயிராகக் கொண்டிருக்கிறது. அத்தகைய உலக மக்களைக் காக்கவேண்டியது மன்னனுடைய கடமை. அங்ஙனம் கடமையாற்றுங்கால் — மக்களைக் காத்தற்கண் வரும் இடுக்கண்களை எண்ணிப் பார்த்தால் அரசு முறை என்பது ஒரு இலேசான காரியமல்ல, அது பெரும் பாரம்!" என்பது அவண் குழுமியிருந்த பலரது அபிப்பிராயமாயிற்று.

ஆனால் அக்குழுவில் இருந்த உறையூரைத் தலைநகராக்கி ஆண்டு வந்த சோழன் நலங்கிள்ளி என்னும் சான்றோன் ஒருவனே "அரசியல் முறை இலேசான காரியமே, அது ஒரு பாரமல்ல!" என்று துணிந்துரைத்தான். எல்லோரும் "ஆ...!" என்றனர். "வியக்காதீர்கள். விளக்குகிறேன், கேளுங்கள்" என்று தொடர்ந்தார். அரசமுறை என்பது மூத்தோர்க்குப்பின் அவர் வழிவந்த இளையோர்க்கு முறைப்படி எய்தக்கூடியது. ஆனால் அவ்வரசினை எய்தினேன் பெரிய பட்டம், பதவி, அதிகாரம், அந்தஸ்தைப் பெற்றுவிட்டோம் என்ற மமதையினால், மக்களுக்கு அதிக வரியினை விதித்து, மக்களைத் துன்புறுத்தி வரி வசூல் செய்வானேயாகில், அவனுக்கு அரசமுறை தாங்க முடியாத பெரிய பாரமேயாகும். மேலும் அத்தகைய அரசு சீரும் சிறப்புமற்ற ஒரு ஆட்சியாகத்தான் விளங்கும். ஆனால் அத்தகைய மூத்தோர் வழிவரும் அரச முறையை, வலிமையையும், வாழ்க்கை முறையையும், அதிக வரிபோடாது மக்களை காக்கின்ற தன்மையும் கொண்ட சிறந்த பண்பைப் பெறுவானேயாகில், வற்றிப் போய்க்கொஞ்சம் நீருடைய இணற்றருகே, வெய்யிற் காலத்தே உலர்ந்து கிடக்கும் சுள்ளியைப் போன்றது—இலேசானது, அதாவது தக்கையைப் போன்றது அச்சிறியோன் பெறும் அரசமுறை என்று சீரிய கருத்தமைந்த சொல்லை ஒரு பாட்டால் விளக்கியுள்ளார்' சோழன் நலங்கிள்ளி. இதோ அப்பாட்டு,

முத்தோர் மூத்தோர்க் கூற்ற முய்த்தென
பாறர வந்த பழவிறற் குயம்
எய்தின மாயின் எய்தினனஞ் சிறப் பெனக்
குடிபுர விரக்குங் கூரி லாண்மைச்
சிறியோன் பெறினது சிறந்தன்று மன்னே
மண்டமர்ப் பரிக்கு மதனுடை நோன்குன்
விழுமியோன் பெறுகுவனாயி னாழ்நீர்
அறுகய மருங்கிற் சிறுகோல் வெண்கிடை
என்றூழ் வாடுவறல் போல நன்றும்
நொய்தா லம்ம தானே மையற்று
விசும் புற வோங்கிய வெண்குடை
முரசுகெழு வேந்த ரரசுகெழு திருவே.

# புயலிடை தென்றல்

—[ காசு ]—

அன்புள்ள பொன்முடி,

நாட்கள் பல நகர்ந்தும் கூடச் சென்ற இடம் குறித்து ஒன்றுமே தெரிவிக்காமலிருப்பது பற்றிப் பெரிய குற்றம் சாட்டியிருந்தாய்.

எங்கு சென்றாலும் தமிழர்களின் அவல நிலை குறித்து ஏற்கனவே உன் உள்ளம் வேதனையடைந்துள்ளது. இம்மடல் அந்த வேதனையை அதிகரிக்கச் செய்யும் எனினும், உன் உள்ளம் மகிழக்கூடிய சில சேதிகளையும் அறிவிக்கப் போகின்றேன் நான்.

மகிழ்விக்கும் சேதி என்றவுடனே, கடைவீதிகளின் அழகினையும், உயர்ந்த கட்டடங்களின் வனப்பையும், எழில் கொழிக்கும் இயற்கைக் காட்சிகள்பற்றியும் எழுதுவேன் என்று நினைப்பாய்.

பம்பாய் போன்ற பெரிய நகரங்களின் நாகரிக வீதிகள்பற்றி அறிந்த உனக்கு, ஐதராபாத் நகரத்து வீதிகள் வியப்பினை அளிக்காது.

இயற்கைக் காட்சிகளின் இருப்பிடமான தமிழகத்தில் வாழும் உனக்கு, இங்குள்ள இயற்கை அளிக்கும் எழில் இன்பந்தராது.

ஐதராபாத் என்ற உடனேயே முகமதியர்களின் சிங்கார வேலைப்பாட்டால் அமைந்த 'சார்மினர்' பற்றியாவது தெரிவிப்பேன் என எதிர்பார்ப்பாய். அதைப்பற்றி எழுத என்ன இருக்கிறது? சரித்திரத்தில்தான் அதைப்பற்றியெல்லாம் நிரம்ப இருக்கின்றதே?

சரித்திரத்தைக் கண்முன் கொண்டுவந்து நிறுத்தும் "கோல்கொண்டா" கோட்டைபற்றியெல்லாம் உனக்கு ஏற்கனவே தெரியுமாதலால், உனக்குத் தெரியாதவற்றை, ஆனால் அவசியம் தெரிந்துகொள்ள வேண்டியவற்றைப்பற்றித்தான் எழுதப் போகின்றேன்.

உன் கண்முன் புயலைக் காட்டப் போகிறேன். புயலிடையே தவழும் தென்றலையும் காட்டப் போகின்றேன்.

நான் கூறப்போவது, உன்னைப் பற்றி, என்னைப்பற்றி, நம்மைப் பற்றி — நம் பரம்பரைகுறித்து— வாழ்விழந்து வாடும் நம் இனமாம் அருந் தமிழ் இனம் குறித்து. ஐதராபாத் வாழும் நம் தமிழர் பற்றி உனக்குத் தெரியாத— ஆனால் தெரிந்துகொள்ள வேண்டியவைபற்றி!

உனக்கு வியப்பாகக் கூட இருக்கலாம், நானா இதைப்பற்றியெல்லாம் எழுதப்போகிறேன் என்று. நொந்துபோன தமிழ் இனம் குறித்து ஒரு நாள் என்னிடம் விவரித்தபோது நான் கொஞ்சமும் பரிதாபப்படாது 'உன்னை முதலில் கவனித்துக்கொள். ஊருக்கு உபதேசம் பிறகு' என்று கூறிய நான்தான் இதனை எழுதுகின்றேன்.

கோலார் தங்கவயலிலே, தங்கம் நிகர் உடலை, மண்ணாக மதித்து, உயிரைப் பணயம்வைத்து, மண்ணைப் பொன்னாக்கித் தந்துவிட்டு, வாழ்வை மண்ணாக்கிக்கொண்டு வாழும் தமிழர் நிலை குறித்து வேதனையோடு கூறிக் கண்ணீர் விட்ட உன்னை அன்று நான் பைத்தியக்காரன் என்றுதான் எண்ணினேன்.

பஞ்சினைப் போன்ற வெள்ளை உள்ளம் கொண்ட நம் தமிழ் இனம் வடநாட்டு ஆலைகளிலே, பஞ்சை நூலாக்கி, நூலினை உயர்தர ஆடைகளாக்கித் தந்துவிட்டு, உடுக்க உடையின்றிப் பஞ்சை வாழ்வு வாழும் நம் தமிழ் இனம், பம்பாய் நகரத்திலே, இருக்க இடமின்றி, சகிக்க இயலாத நாற்றமெடுக்கும் சாக்கடை ஓரங்களிலே வீடெனப்படும் குடிசைகளில் மழைக்காலங்களில் படும் அவதி பற்றி ஒரு நாள் நீ வேதனைக் கண்ணீர் வடித்தபோது கூட உன்னை நான் ஓர் அப்பாவி என்றுதான் எண்ணினேன்.

நேரில் காண நேரிட்டதால் உன்னைப்போலவே நானும் வேதனைக் கண்ணீர் வடிக்கின்றேன் இப்போது!

"தான் ஆடாவிட்டாலும் தன் சதை ஆடும்" என்கிறார்களே, அதுதான் இதுபோலும்!

தமிழர் என்றதும், தமிழ்பேசும் அனைவரும் தமிழர் என்று எண்ணுவது எவ்வளவு பேதைமை தெரியுமா?

"விதையாது விளையும் கழனிகள்" இங்கும் உண்டு. சொகுசான வாழ்வு வாழும் அவர்களை, அவர்களை 'தமிழர்' என்று கூறிக்கொள்ளாதபோது நாம் ஏன் அவர்களைத் தமிழர் எனக் கூற வேண்டும்?

பேசும் மொழி தமிழ்தான்— பிறந்து வளர்ந்த நாடு தமிழ்நாடுதான்—ஆனால் 'அவாள்' மதருசிகளே' தவிர, தமிழர்கள் இல்லை.

இடத்திற்கேற்ப, ஆளுக்கேற்ப வாழும் வல்லுனர்கள் ஆயிற்றே அவர்கள்! அவர்கள்பற்றி ஏன் இப்போது?

இங்கு மூவாயிரத்திற்கு மேற்பட்ட தமிழர்கள்—அதாவது 'தமிழ் இனம் எம் இனம்' எனப் பெருமையுடன் கூறிக்கொள்ளும் தமிழர் வாழ்கின்றனர்—தவறு— வாழ்ந்துகொண்டே வதைகின்றனர்.

இந்தப் பெரிய தொகையில் அவர்கள் வகிக்கும் உயர்ந்தபதவி என்ற ஒன்று இருந்தால், அது என்ன தெரியுமா? 'குமாஸ்தா' பதவி. அப்படியென்றால் மீதிப் பேர்? சொல்லவேண்டுமா? கூலிதான்! வேறென்ன எஞ்சி நிற்பது!!

இக்காட்சியெல்லாம் பார்த்து உள்ளம் புயலாக மாறும்போது, தென்றலான காட்சிகள் சில கண்டேன். வேதனையைக் கொட்டிய நான், மகிழ்ச்சியினையும் மறைக்காது அளிக்கின்றேன்.

ஒவ்வொரு தமிழன் உள்ளத்திலும் வீசும் பகுத்தறிவின் ஒளிதான் என் மகிழ்ச்சிக்குக்காரணம். அந்த ஒளியின் ஆரம்ப இடமான நம் தமிழ்நாட்டில்கூடப், பாதிக்கு மேற்பட்டோர் இருளினின்றும் ஒளிக்கு வரப் பயந்தவண்ணம்

தானே உள்ளனர். அப்படியிருக்க, ஆயிரம் மயில்களுக்கப்பால் இருந்தாலும், அந்த ஒளி இங்குபரவி இருப்பது காண உள்ளம் மகிழத்தானே செய்யும்?

நம்மவரிடையே இங்கு பழைமை இருள் அகன்றுவிட்டது — புத்தொளி வீசுகின்றது-புதுப்பொலிவுடன்.

ஐந்நூறு தமிழர்களுக்கு மேல் வாழும் ஊரான "மியான் பூர்" என்ற ஊரின் பெயரை "வள்ளுவர் நகர்" என்று மாற்றி அமைத்துள்ளனர் இங்கு.

சோற்றைவிட மானம் தான் பெரிது எனக்கூறி அன்று கல்லக்குடிப் போராட்டத்தில் தடியடிபட்டு சிறைபுகுந்த உனக்கு இந்தச் சேதி எந்த அளவிற்கு மகிழ்ச்சியினை அளிக்கும் என்று எனக்கு நன்ருகத் தெரிகின்றது.

வாழ்வில் நிலைகுலைந்துவிட்டாலும் பண்பில் தலைகுனியாத தமிழ் இனம் நம் இனம் என்று என் உள்ளம் அவர்களைப் போற்றுகின்றது!

இந்த ஆண்டில் "வள்ளுவர் நகரில்" நடந்த திருமணங்கள் அனைத்தும் திருந்திய மணங்கள் தான் — சீர்திருத்தத் திருமணங்கள்தான்! பெற்ருேரின் பூரண சம்மதத்தோடு, பெற்ருேரின் தலைமையில், சுற்றத்தார் முன்னிலையில்!

'சிறுகை நீட்டி, குறுநகை புரியும்' மழலைச் செல்வங்கள், வருங்காலத்துத் தமிழர் வாழ்வைத் தரணியில்—முன்னணியில் நிறுத்தப்போகும், இளஞ்செல்வங்களின் பெயர்கள் என்ன தெரியுமா? சேரன், சோழன், பாண்டியன், பூங்கோதை, மணிமேகலை—இவைபோன்றவைதான்!

இப்படி ஒவ்வொரு செயலிலும் புரட்சி மணம்தான்! நம் சமுகத்துப் பணிகள் சிறப்பாக நடந்து வரும் இந்தச் செயலினைத்தான், நான புயலிடை தென்றல் என்கின்றேன்.

அடுத்த ஆண்டு நான் உன்னிடம் வருவதற்குள், நம் வட்டாரத்திலும் இந்தப் பகுத்தறிவின் ஒளியினைக் காணமுடியுமா?

அன்புள்ள,
சேரன்.

★

*8-ம் பக்கத் தொடர்ச்சி*

போட்டியின்றி முனிசிபல் தேர்தலில் வெற்றி பெற்றவர் ஓய்...... ஆசானுக்கு உயிரை விடுவாரு." என்று கூறுவார். சென்றவருக்கு உற்சாகமொழிகூறி வரவேற்பதை விட்டு, இஷ்டம்போல் பாட்டி வீடு போல் பள்ளியைநினைத்துப் புலம்பி விட்டு, நீர் என்ன வர்க்கம் என்பதை எல்லாம் வழக்கம்போல் கேட்டுவிட்டுச் சொல்லுவார், "சம்பளம் மூன்று மாதத்திற்கொருமுறைதான் கிடைக்கும், அதிலும் நான் தலைமை ஆசான் பாருங்கோ (படிப்பிலல்ல; வயதில்) 65 ரூபாய் தருவேன் சம்மதமா ?..............இஷ்டப்படலே, நான் நம்ப வார்டு மெம்பரிடம் கூறி உம்மை வகையா அனுப்பிச்சுடுவேன், என்ன சொல்றீர்" என்பார். புதிதாக வேலைக்குச் சென்றவரின் மனம் என்ன நினைக்கும் என்பதை வாசகர்களே உணர்ந்துகொள்ளலாம்.

இந்த நிலையில் இதையும் விட்டால் வேறுவழி வேண்டுமே வாத்தியாருக்கு, எதற்கும் சரிபோட்டு விட்டு நாற்காலியில் அமர்ந்து கொண்டு நாட்களை எண்ண முற்படுவார். இத்தனை சோதனைகளுக்கும் ஆளாகிய ஆசிரியர் வாழத்தொடங்கினுல், வாழ்க்கைத்துணைவியின் வயிறு, வளர்பிறைகளான குழந்தைகளின் வயிறு, இவர்களின் வயிற்றை நிரப்ப ஆசிரியர் படும் அவதி சொல்லி முடியாது. இந்த இன்னல்களுக்கேற்ப அரசினர் தருவது அறுபத்தைந்து ரூபாய், உலக மேதைகளை சமுதாயச் சிற்பிகளை உருவாக்கும் ஆசிரியருக்குக் கிடைக்கும் ஊதியம் தவிர வேறு என்ன இருக்கிறது? இதுமட்டுமல்ல, ஆசிரியர்கள் அத்தனை பேரும் அரசியலில் பங்கெடுக்கக்கூடாது. ஆனால் ஆளும் கட்சிக்கு ஆமாம்போடவேண்டுமாம், இப்படி ஓடுகின்றது ஆசிரியர்களின் அவல வாழ்க்கை.

இந்தக் குறைபாடுகளை, பாரதத்தில் பதவி வகிப்பவர்களிடம் கூறினுல், "பயப்படாதீர்கள் ஆசிரியர்களே! உங்கள் நிலையை நாங்கள் அறிவோம்—புரிவோம், உங்கள் நிலையை உயர்த்த நாங்கள் அறிவோம்—செய்வோம், உங்கள் நிலையை உயர்த்த நாங்கள் நினைத்துவிட்டோம், இன்னும் சொற்ப ஆண்டுகள் பறந்தபின் பசி இல்லாமல் வாழ்வீர்கள்" என்று பதம் பாடுகிறர்கள். அதோடு விட்டார்களா? "சமூகத்தில் உங்கள் மதிப்பு பெருமதிப்பு, எழுத்தை அறிவிக்கும் ஈசன் நீங்கள், உங்கள் உழைப்பு நாட்டிற்கு மட்டுமல்ல, தேர்தலிலும்கூடத்தான் (ஓட்டுப் பதிவதற்கும், சேகரிப்பதற்கும்) உங்கள் நிலைபற்றி அடுத்த ஐந்தாண்டுத் திட்டத்தில் குறிக்கப்படும். குறைதீர்க்குறுகிய காலமே உண்டு.

கலங்காதீர்கள் அண்டை நாடுகளில் ஆசிரியர்களுக்குண்டான வசதிமுறையில் அரைக்கால் பங்காவது இருக்கவேண்டாமா? ஆசிரியர்கள் அத்தனை பேர்களும் பசியாவரம் பெற்றவர்களா? சமூகக் கைதிகளாய்ச் சாகவும் முடியாமல், வாழவும் முடியாமல், ஆசிரியர்கள் படும் அவதி ஐயகோ சொல்லத்தரமன்று.

★

சுவை சொட்டும் விருந்து! ★ ★ ★

ப. உ. சண்முகம், எம். எல். ஏ.

தீட்டும்

"காதல் பரிசு"

தொடர் கதை

விரைவில்! நமது ஏட்டில்!!




[அவன் எடுபிடிதான்—ஆனால் இருந்த இடமோ காங்கிரசின் 'பெரும்புள்ளி' ஒருவரின் வீட்டில்! அவனைப் போன்றவர்களுக்குத் தானே தெரியும், அந்தப் 'புள்ளி'களின் உண்மை உருவம்—மறைக்கப்படாத உருவம்.

இதோ, அவனது ஒரு நாளைய அனுபவம்.]

எஜமான் அதிகாலையில் எழுந்தார்—குளித்தார்—தனியறைக்குப் போய்விட்டார்!

"யார் வந்தாலும் என் அனுமதி இல்லாமல் உள்ளேவிடாதே"—இது அவர் எனக்களித்த கண்டிப்பான உத்தரவு!

எனக்குத் தூக்கிவாரிப் போட்டது! காரணம், அவர் எப்போதும் இப்படிச் சொன்னதில்லை!

யார் வந்தாலும் அவரோடு இனிக்கப் பேசுவார்—அரட்டை அடிப்பார்—பொழுது போக்குவார், நேரம் போவதே தெரியாமல்! அப்படிப் பொழுதைப் போக்குவது, அன்றாடக் கடமைகளில் ஒன்று அவருக்கு!

எதையெதைப் பற்றியெல்லாமோ பேசுவார்—பற்பலர் அடிபடுவர் அவரது பேச்சில்!

"மந்திரிகளாம், மந்திரிகள்! என்ன சாதிக்கிறார்கள், இவர்கள்! 'பைல்'களிலேயே எந்நேரமும் புதைந்து கிடக்கிறார்கள்! இந்த இடத்திலே இருக்கிற 'கமா'வை அங்கே போடு, அங்கேயிருக்கிற அரைப்புள்ளியை இங்கே மாற்று, இந்த வாசகத்தை இப்படித் திருத்து, என்று ஆணையிடுவதோடு முடிந்துவிடுகிறது அவர்களது வேலை! வேறென்ன சாதிக்கிறார்கள்! இப்படி இருந்தால் கட்சி எப்படி வளரும்? என்னைப் போன்றவர்களல்லவா, தலையிட்டு நிலைமையைச் சீர்படுத்தி, செய்ய வேண்டியதைச் செய்து, பார்க்க வேண்டியவர்களைப் பார்த்து,

> "ஹோம்லண்ட்" இதழில் சி. என். ஏ. அவர்களால் தீட்டப்பட்ட கதையின் மொழி பெயர்ப்பு இங்கே தரப்பட்டு இருக்கிறது.

பேசுவதைப் பக்குவமாகப் பேசி, கட்சியை வளர்க்கவேண்டி இருக்கிறது! தட்டிக்கொடுத்துச் சிலரையும், தலைமேல் தூக்கிவைத்துப் புகழ்ந்து மற்றும் சிலரையும் ஆசை காட்டி வேறு சிலரையும், இழுத்துப் போட்டல்லவா கட்சியை நடத்த வேண்டி இருக்கிறது!

நான் மட்டும் தலையிடாமலிருந்தால்......அந்தப் போலாநாத் இந்நேரம் கட்சியைவிட்டே போயிருப்பார்!......கட்சிக்கும் பெருத்த நஷ்டம் ஏற்பட்டு இருக்கும்!

அந்தப் போலாநாத் மட்டும் இல்லையென்றால், டில்லியிலிருந்து வந்தாரே ஒரு மந்திரி—உதவி மந்திரி—அவருக்கு அறுசுவை உண்டி ஏற்பாடுசெய்து, அவரது மனங்குளிரச் செய்திருக்க முடியுமா? அந்த போலாநாத் மந்திரியிடம் எதையோ கேட்டாராம்—மந்திரி மறுத்துவிட்டாராம். போலாநாத்துக்குப் பொல்லாத கோபம் வந்துவிட்டது. வராமல் எப்படி இருக்க முடியும்? சட்டம் இடங்கொடுக்கவில்லை, என்றல்லவா அந்த அமைச்சர் விளக்கம் தந்தாராம்! உண்மையில் மிக வேடிக்கையான விளக்கம்!! இல்லையா? சட்டங்களை உண்டாக்குவதற்குத்தானே அமைச்சர்கள், அந்தப் பீடங்களில் அமர்த்தப்பட்டு இருக்கிறார்கள்—அதற்காகத்தானே ஏராளமான பணமும் அவர்களுக்கு தரப்படுகிறது, சம்பளமாக!

கோபமடைந்தபோலாநாத்தைச் சாந்தப்படுத்த, அப்பப்பா நான் பட்டபாடு! மணிக்கணக்கில் பேசி வாதம் செய்து, குணக்குன்றே கோமானே என்று துதிபாடிய பிறகல்லவா அவரது கோபம் தணிந்தது?

கரீம்கானை எடுத்துக்கொள்ளுங்களேன். முஸ்லீம்லீக் கட்சியைச் சேர்ந்த அவரை நம் கட்சியில் சேர்க்க, நான் என்னபாடுபட்டிருக்கிறேன்!...காங்கிரசு என்றால் ஏறெடுத்துக்கூடப் பார்க்காத அவரது உடலை இன்று கதர் அலங்கரிக்கிறதே, எப்படி? எல்லாம் என் 'கைத்திறன்'

—இப்படி எஜமானன் 'எத்தனையோ தடவைகள் தனது பிரதாபங்களை, கைத்திறத்தை, நாலு பேரைச் சேர்த்துவைத்துக் கொண்டு அளப்பதுண்டு!

அவரே "யாரையும் உள்ளே விடாதே!" என்று கட்டளை பிறப்பித்தால், எனக்கு ஆச்சரியம் ஏற்படாமல் என்ன செய்யும்?

என் ஆசனத்தில் — அறைக்கு வெளியில்தான் — அமர்ந்தேன்! அறையின் கதவு மூடப்பட்டிருந்தது!

பானை வயிறு பராங்குசம் வந்தார்! இப்போதெல்லாம் என் எஜமானர் அவரை அப்படித்தான் குறிப்பிடுவது வழக்கம் — அவர் இல்லாதபோதுதான்! இருக்கும்போது, சொல்லுவாரா, என்ன!

நான் அவரைத் தடுத்து நிறுத்தினேன்.

"முட்டாள்! என்னையா தடுத்து நிறுத்துகிறாய்? உனக்கு எவ்வளவு நெஞ்சழுத்தம்!......பார் உன்னை என்ன செய்கிறேன் என்று!" — பராங்குசம் கர்ஜித்தார்.

"சார்! மன்னிச்சிக்கோங்க சார்! எஜமான் உத்தரவு அப்படி சார்! நான் என்ன சார் செய்வேன்" நான் கெஞ்சினேன்.

"எஜமான் உத்தரவு!...யாரப்பா எஜமானன்?......இங்கே இருக்கானே, இந்தப் பயல்?......இந்த முடாமுழுங்கியா? அவனுக்கு சாப்பாடு துணிமணியெல்லாம் கொடுக்கறது நாங்கள்......அவன் எனக்கு எஜமானனாவது? உனக்கு எஜமானன்.....அவ்வளவுதான்.... தெரியுதா? அவன் சொன்னான்னு நீ குறுக்கே வந்தே, மண்டை உடைஞ்சிடும், ஜாக்கிரதை" என்று சொல்லிக்கொண்டே பாய்ந்தார் என்மீது!

"ஐயா, ஐயா, என்னை விட்டுடுங்கய்யா" இது நான்!

அதற்குள், நல்ல வேளையாக அறைக்குள்ளிருந்த என் எஜமான் இதைக் கவனித்துவிட்டார்.

"பராங்குசம்! என்ன இது, ரௌடித்தனத்தையா காட்டுறே இங்கே?"

"ஓ...! நீ எப்போ அப்பா பெரிய மனுஷன் ஆனே? நான் செய்தது தப்புதான்! இவனை அடிச்சேன் பாரு......உன்னையல்லவா அடிச்சிருக்கணும்...என்ன செய்யறேன் பாரு"

"எஜமான்! போலீசைக் கூப்பிடட்டுங்களா?" என்று நான் கேட்டேன்!

"கவலைப்படாதே, போலீசு எதற்கு? பராங்குசம் 'போதை'யிலே இருக்கும்போது அப்படித்தான்..."

"நான் போதையிலிருக்கேன்?... ஆம்! அதனாலென்ன?...அந்த 'பர்மிட்' வாங்கித் தர்ரதுக்குதான் நீ இருநூறு ரூபாய் வாங்கிட்டியே எங்கிட்டேயிருந்து! உம்! சட்டம் என்பக்கம் இருக்குது! போதாதற்கு, இதோ பார், கைத்தடி...அதுவும் இருக்குது"

"சரி, சரி! விஷயத்தைச் சொல்லு! நீ ஏன் இப்போ இங்கே வந்தே? எனக்கு நேரமில்லை— வேலை நிறைய இருக்கு!...சீக்கிரம் சொல்!"

"அது சரி! என்னை ஏன் கட்சி அபேட்சகனாத் தேர்ந்தெடுக்கல்லே!"

"ஓ...! உன்னைத் தேர்ந்தெடுக்கல்லியா! எனக்கே இப்பதான் தெரியுது, சந்தோஷம்!"

"சந்தோஷமா!"

"ஆமாம்!.....நன்றிகெட்டவர்களுக்கு வேறென்ன கிடைக்குமாம்?...போனமாதம் ஒரு சிறு உதவிக்காக — அதுவும் கட்சிக்காக — உன்னிடம் வந்தபோது, ஒதுக்கித் தள்ளிவிட்டாயல்லவா, உனக்கு வேண்டியதுதான்!...... ரொம்ப சந்தோஷம்'...'செலக்ஷன் போர்டு' உன்னைத் தள்ளிவிட்டது, அப்படித்தானே? உண்மையைச் சொல்லப்போனால், நான்தான் முட்டாள்தனமாக, உன் பெயரை சிபாரிசு செய்தேன் — அதுகூட உனக்காக அல்ல—பாகீரதி இருக்காளே, அவளுடைய முகதாட்சண்யத்துக்காக!......உம்! நான் என்ன செய்யட்டும்? போர்டுக்கு உன்னைப்பற்றி அளவுக்கு மீறியே தெரியும்"

"...என்னது! நீ சிபாரிசு செய்தாய்...போர்டு தள்ளிவிட்டது... அப்படித்தானே!"

"ஆம்! போர்டுக்குதானே முழு அதிகாரமும்!"

"ஆமா, இந்த போர்டு ஏன் இவ்வளவு முட்டாள்தனமா நடந்தது? ஏன் அதுக்கு அவ்வளவு தலைக் கொழுப்பு?"

"போர்டு மெம்பர்களைக் கேள், அவர்களிடம் உன்னால் நெருங்க முடியுமானால்...! அவ்வளவு ஏன்? அதைவிட நல்லது, சூரியைக் கேளேன்!"

"சூரி? அந்த பிளாக் மார்க்கட்காரனா? அவனுக்கும் இதுக்கும் என்ன சம்பந்தம்?"

"அந்த விஷயம் உனக்கெங்கே தெரியப்போவுது? இரகசியத்தை உங்கிட்டே சொல்லக்கூடாது! இருந்தாலும், ஏதோ பழைய தொடர்புக்காகச் சொல்லுகிறேன். சூரி இருக்காரே, அவர்தான் சேர்மனாகப் போகிறார்!"

"சூரி — சேர்மன்! ...நடக்காது நடக்கவே நடக்காது!!"

"பத்துஇலட்சம் ரூபாயை அதுக்காக ஒதுக்கிவச்சிட்ட பிறகு, நடக்காமலா போய்விடும்? தேர்தலுக்கு நிக்கிற எல்லா அபேட்சகர்களுக்கும் உதவி செய்யறதாக, வாக்குறுதி தந்திருக்கிறார்—அதுவும் இரண்டு நிபந்தனையின் பேரில்! நிபந்தனை என்ன தெரியுமா? ஒன்று நீ வெளியே அனுப்பப்பட வேண்டும். இரண்டாவது நிபந்தனை, அவர் சேர்மன் ஆக்கப்பட வேண்டும்."

"அதற்குநீங்களெல்லாம் என்ன சொன்னீர்கள்? ஒப்புக்கொண்டீர்களா, என்ன?"

"நானில்லே! ஆனால் போர்டு ஒப்புதல் தந்துவிட்டது? போர்டு வேறென்ன செய்யமுடியும்? எப்படியோ கட்சி வெற்றிபெற்றாக வேண்டும்! எனக்கென்னவோ, உன்மேல் நம்பிக்கைதான் — அதனால்தான் மேலிடத்துக்குப்போய் உனக்காகச் சிபாரிசு செய்தேன்!... ஆனால் நீயல்லவா கெடுத்துக்கொண்டாய்? கட்சி அபேட்சகர்களுக்குப் பண உதவி தரமுடியாது என்று சொல்லிவிட்டாய்! அதனால், வேறு ஏற்பாடு ஏதாவது செய்துகொள்ளுங்கள், என்று நான், போர்டுக்குச் சொல்லவேண்டியதாயிற்று— போர்டும் அப்படியே செய்துவிட்டது! இப்போதும் காரியம் ஒன்றும் கெட்டுவிடவில்லை! சூரியின் மனு இன்னும் என் கையில்தான் இருக்கிறது—போர்டுக்குப் போகவில்லை."

"அதுசரி, கொஞ்சம் நிதானமாக யோசித்துப்பார் — அவசரப்படாதே! போன தடவை நான் கட்சிக்கு ஏராளமான பண உதவி செய்தேன் — கட்சிக்கும் நல்ல 'மெஜாரிடி' கிடைத்தது..."

"சேர்மஞக இருந்தாய்! நல்ல வாய்ப்புக் கிடைத்தது உனக்கு, பலரோடும் பழக! இல்லையா? ஒரு டஜன் மந்திரிகளுக்கு மேல் உன்னோடு விருந்து சாப்பிட்டார்கள்—கை குலுக்கினார்கள்!"

"நான் செலவழித்த ஐந்து இலட்சமும் இதுவும சரியாகிவிட்டது என்கிருயா?"

"எனக்கென்னவோ கணக்கு அவ்வளவாகத் தெரியாது! ஆனல், விஷயங்களை ஓரளவு புரிந்துகொள்வேன், வாதாடு வேன்! நீ ஐந்து இலட்சம் செலவு செய்தாய் என்பதென்னவோ உண்மைதான்—ஆனல் அந்தப் பணத்தை உன் பையிலிருந்தா எடுத்துச் செலவு செய்தாய்? என்னுடைய உதவியால் அதைப் போல் எத்தனை ஐந்து இலட்சங்களைச் சம்பாதித்து இருப்பாய்? இல்லையென்று சொல்லமுடியுமா? ...உம்! அதைப்பற்றியெல்லாம் இப்போது சர்ச்சை ஏன்? நீ பதவியிலிருந்து அனுபவித்துவிட்டாய்—இப்போது அதை நீ விரும்பவில்லை! பிறகு போர்டின் மீது குற்றம் சாட்டிப் பலன் என்ன?

"அது சரி! சூரிக்கும் எனக்கும் வியாபார விஷயத்திலே பலத்த போட்டி என்று உனக்குத் தெரியுமல்லவா? அவனது ஆதிக்கமும் அந்தஸ்தும் வளர்ந்துவிட்டால் என கதி, என்ன ஆவது?"

"அதற்கு நானென்னசெய்வது? உண்மையிலேயே உம்மைப் பார்க்கும் போது வருத்தமாகத்தான் இருக்கிறது... ஆனல் கட்சி இந்த விஷயங்களையெல்லாம் கவனித்துக் கொண்டிருக்க முடியாதே!"

"அப்படியானல்,.........எனக்கு அழிவு தேடவே தீர்மானித்துவிட்டீர்கள்! அப்படித்தானே?"

"உம்! அப்படி நான் சொல்ல மாட்டேன்! சூரியிடமிருந்து கிடைக்கக்கூடிய உதவியைக் கட்சி இழப்பதாக இல்லை! அதன் பலன் உமக்கு வேண்டுமானல் பாதகமாக முடியலாம்! ஆனல் கட்சிக்கு?"

"நீங்கள் கழுகுகள் — அதுவும் பிணந்தின்னிக் கழுகுகள்!"

"கருடன்கள் என்று சொன்ன வாய்தானே இப்போது கழுகுகள் என்றும் சொல்லுகிறது. மகிழ்ச்சி பிறந்தால் ஒரு பெயர், மனக் கிலேசம் இருந்தால் மற்றொரு பெயர், இல்லையா பராங்குசம்?"

"சூரி 'காண்ட்ராக்ட்' தொழிலில் இறங்கிவிட்டான்!"

"இதுவரை அந்தத் துறையில் நீங்கள்தானே முடிசூடாத மன்னர்கள்! அதனல் கொள்ளை கொள்ளையாகப் பணமும் குவிந்தது; மறுக்க முடியுமா?"

"எனக்கு இலாபம் கிடைத்ததென்னவோ உண்மைதான்! உங்களுக்கு மட்டும் அதில் பங்கு கொடுக்காமலா போய்விட்டேன்."

"சிறிதளவு கொடுத்தீர்கள், ஒப்புக்கொள்கிறேன்."

"இருந்தும் சூரியை ஏன் இடையிலே சேர்த்துக்கொண்டீர்கள்?"

"நானே? போர்டு சூரியோ பூரியோ, யாரையாவது தேடிப் பிடித்தாக வேண்டுமே! நீங்கள் உதவி செய்ய முடியாது என்று கையை விரித்துவிட்ட பிறகு, கட்சி கையைக் கட்டிக்கொண்டு மூலையிலா உட்கார்ந்துவிடும்! கட்சிக்கு எப்படியும் வெற்றி கிடைத்தாக வேண்டும்—வளர்ச்சி பெற்றுத் தீரவேண்டும்! வேறு வழிதான் என்ன, சூரியை இழுத்துப் போடுவதைத் தவிர?"

"அப்படியானல் கட்சியின் செல்வாக்கு வளர்ந்துவிட்டது, நமக்கு வெற்றி நிச்சயம், என்று இவ்வளவு நாட்களாகச் சொல்லி வந்தீர்களே, அதெல்லாம் பொய்தானே?"

"நான் சொன்னேன் — இப்போதும் சொல்கிறேன். செல்வாக்கு வளர்ந்ததாலேதான் பராங்குசம் போனல், மறுகணமே சூரி உள்ளே வருகிருர்; இல்லையானல் முடியுமா?"

"ஓ...! இந்தச் 'செல்வாக்கைச் சொல்லுகிறீரா? மக்களின் ஆதரவைப் பற்றியல்லவா கூறுகிறீர்கள் என்று நினைத்தேன்!"

"சுருக்கமான வழிகள் ஏராளமாக நமக்கு இருக்கும்போது, கொள்கையைப் பற்றிக் கவலைப் படுவானேன்?"

மக்களின் ஆதரவெல்லாம் எங்களுக்குத்தான், எனவே வெற்றி நிச்சயம் என்று உங்களில் பலர் முழக்கமிட்டார்களே, அதெல்லாம்...?"

"வெற்றி நிச்சயம் என்று சொன்னதென்னவோ சரிதான்—அதற்குச் சொன்ன காரணம் வேண்டுமானல் தவருக இருக்கலாம்! அதனலென்ன? ஆர்வத்தில் கொஞ்சம் மிகைப்படுத்திப் பேசியிருப்பார்கள்!"

"ஏன் குழப்புகிறீர்கள்! உங்கள் கட்சி மக்களின் ஆதரவை இழந்துவிட்டது. அதை ஈடு செய்ய சூரியைப் போன்றவர்களை இழுத்துப் போடுகின்றீர்கள்! அவர்களுடைய பணத்தைக் கரைத்துக் கட்சிக்கு ஆதரவு தேடுகிறீர்கள், அப்படித்தானே?"

"இந்தத் தடவை சூரியின் நிலையில் நீங்கள்! அப்போது அந்த உண்மை புரியவில்லை — இப்போதுதான் புரிகிறது உங்களுக்கு, இல்லையா?"

"உம்! ஈவு இரக்கமற்றவர்கள்! உங்கள் ஆணவம் நாளுக்கு நாள் அதிகமாகிக்கொண்டு வருகிறது. உங்களுடைய குறுக்கு வழிகளும், கோணல் திட்டங்களும் சூதுச் செயல்களும், மக்களுக்குத் தெரியாதென்று நினைக்கிறீர்கள்!"

"ஓ......! தி. மு. க. பத்திரிகைகளைப் படித்து வருகிறீர்களோ? நீங்கள் பேசுவதைப் பார்த்தால், அப்படித்தான் எனக்குத் தெரிகிறது!"

"நான்தான் பத்திரிகையே படிப்பதில்லை என்று உங்களுக்குத் தெரியுமே! கணக்குப் புத்தகங்களைப் பார்க்கவே நேரமில்லை—நானெங்கே பத்திரிகை படிக்கப் போகிறேன்? உண்மையை ஒளிவு மறைவு இல்லாமல் சொல்லுகிறேன், அவ்வளவுதான்!"

"உண்மையாக இருக்கலாம் — ஆனல் அது முழு உண்மையல்ல! அதிகாரத்தில் இருக்கும் கட்சி எப்படியும் அதிகாரத்தைப் பெற்ருக வேண்டும். அதற்கு என்ன வழியோ அதைப் பார்த்துக் கொள்ளுகிருேம்! உம்மால் போதுமான அளவு பணம் செலவு செய்ய முடியாது—ஆனல் சூரியால் முடியும் என்று தெரிகிறது!"

"தெரிகிறது, அவ்வளவுதான். தகிடுதத்தங்களை நடத்திக்கொண்டிருக்கிருர் சூரி, பிர்லா பஜாஜ்களைப்போல! என்றைக்காவது ஒருநாள் அவன், ஆபத்திலே

சிக்கிக்கொள்ளப் போகிறான், அப்போது பாருங்கள்!''

''ஆனால் போர்டு அவரைக் கேட்டபோது, தங்குதடையில்லாமல், ஒப்புக்கொண்டாரே!''

''அது ஒப்புக்காக — உங்களை திருப்திப்படுத்த! அவரால் இந்த அளவு செலவு செய்ய முடியாதென்று எனக்கு நிச்சயமாகத் தெரியும்!''

''தவறு! இந்த மூன்று மாதத்திலே மட்டும் நாற்பது இலட்சம் ரூபாய்க்கு ஏற்றுமதி செய்யப் போகிறாராம் — எந்தப் பொருளை என்று எனக்குத் தெரியாது! ஆனால் ஏற்றுமதி செய்கிறார் என்பதென்னவோ உண்மை!''

''பூ! நாற்பது இலட்சம்தானே! நான் கிட்டத்தட்ட ஒரு கோடி ரூபாய்க்கு ஏற்றுமதி செய்கிறேன்?'

''அதற்கு வேண்டிய ஆர்டர் உங்களிடம் இருக்கிறதா?''

''நிச்சயமாக!''

''எனக்கு இதெல்லாம் ஒன்றும் தெரியாது. ஆனால் அதில் ஏதாவது மாறுதல் ஏற்பட்டாலும் ஏற்படக்கூடும்!''

''வீணாக என்னை பயமுறுத்துகிறீர்கள்!''

''இல்லையில்லை! நான் ஏன் உங்களைப் பயமுறுத்தப்போகிறேன்? ஏற்றுமதி இறக்குமதி என்று சூரி ஏதோ சொல்லிக்கொண்டிருந்தார்!... உங்களுக்குத்தான் தெரியுமே, நான் வியாபாரத்தைப் பற்றிக் கொஞ்சமும் கவலைப்படுவதில்லை என்று! அதனால்தான்...!''

''சரி, சரி! உங்கள் திட்டம் அந்த அளவுக்கு — என் கழுத்தை அறுக்குமளவுக்கு—போகுமானால்? ...உம்!...யோசிக்கிறேன்...''

''அப்படியானால் சூரியின் மனுவை அனுப்புவதைக் கொஞ்சம் நிறுத்தி வைக்கட்டுமா?''

''அது அனுப்பப்படவே வேண்டாம்...எனக்கு ஒருவார அவகாசம் கொடுங்கள்......முடிவு சொல்லுகிறேன்.''

''ஒரு வாரமா? அதெப்படி முடியும்? போர்டு தொந்தரவு செய்து கொண்டு இருக்கிறது — இந்த தி. மு. க. வேறு தினம் தினம் நம்மைத் தாக்குகிறது. போர்டிலிருந்து வருகிற ஆளிடமிருந்து தப்பித்துக் கொள்வதற்காகத்தான் 'யாரையும் உள்ளேவிடாதே' என்றுகூடச் சொல்லிவைத்தேன்! ...இந்த பாகீரதி மட்டும் தலையிடாமலிருந்திருந்தால்... இன்னேரம் சூரியின் மனு போர்டுக்கு அனுப்பப்பட்டிருக்கும்! பதவி உங்களை விட்டுப் போகக்கூடாது என்று ஒரே பிடிவாதமாகச் சொல்லுகிறாள் அவள்!''

''அப்படியானால் பாகீரதிக்கு, சூரியின் திட்டம் ஓரளவு தெரியுமென்று சொல்லுங்கள்!''

''ஓரளவென்ன! முழுவதுமே தெரியும்! பாகீரதியை அவமானப் படுத்துவதற்காகத்தான் சூரி சேர்மன் ஆக முயற்சிக்கிறான், தெரியுமா?''

''பாகீரதிக்கும் இதற்கும் என்ன சம்பந்தம்?''

''உம்! உங்களுக்கு ஒன்றுமே தெரியாதா! பாகீரதிக்கு உங்கள் மேல் உயிர்! உங்களைப்பற்றி உயர்வாகவே எப்போதும் பேசுவாள்! ஒருநாள் ஷோபாவை அவள் சந்தித்திருக்கிறாள்! ஷோபா தெரியுமோ, சூரியின் மனைவி! உங்களைப் பற்றி, வழக்கம்போல், பாகீரதி, உயர்வாகப்பேச ஆரம்பித்திருக்கிறாள். ஷோபா குறுக்கிட்டு ''இதிலென்ன கஷ்டம்! பணம் செலவு செய்தால் யார் வேண்டுமானாலும் சேர்மனாக வந்துவிடலாம்'' என்றாளாம்! இல்லையென்றாள் இவள்! பந்தயம் வைக்கப்பட்டது! என்ன தெரியுமோ? பராங்குசம் மட்டும் சேர்மனாக வரவில்லையென்றால், என்கன்னத்தில் பகிரங்கமாக, அறை கொடு, வாங்கிக் கொள்ளுகிறேன் என்று சவால் விட்டிருக்கிறாளாம்!''

''அட கடவுளே! விஷயம், அந்த அளவுக்கா முற்றிவிட்டது? எனக்கு ஒன்றுமே தெரியாதே!''

''சூரிக்கு அரசியலென்றாலே பிடிக்காது! மனைவியின் ஆசையை நிறைவேற்றுவதற்குத்தான் இப்போது மும்முரமாக ஈடுபட்டிருக்கிறார்! பாகீரதிக்கு பயம் ஏற்பட்டு விட்டது! உங்களைத் தனியாகச் சந்தித்துப் பேசவேண்டும் என்று கூடச் சொல்லிக் கொண்டிருந்தாள்''

''அவளை...நான்... சமீபத்தில்... எக்ஸிபிஷனில் கூடப் பார்த்தேனே...''

''பார்த்தால்...? உடனே உங்களிடம் ஓடிவந்துவிடுவாளென்று எதிர்பார்க்கிறீர்கள்!— அதுவும் அந்த இடத்தில்!...அவள் ரொம்ப வேதனைப்படுகிறாள்! சூரியின் திட்டத்தை போர்டுக்கு அனுப்ப வேண்டாமென்று அவள்தான் கேட்டுக்கொண்டாள்!!

''ஷோபா பாகீரதியை அறைவதா? முடியாது! என்றைக்கும் நடக்காது! அவள் கன்னங்கள்... அறைபடுவதற்கல்லவே! உம்! நான்! ஆம்! இவ்வளவு நாட்கள் முட்டாளாகவல்லவா இருந்து விட்டேன். சரி, சரி, சூரியின் திட்டத்தைக் கிழித்தெறியுங்கள். இந்த முறையும் நான் சேர்மன் ஆகத் தயார்!

''உண்மையாகவா?.......அப்படியானால் நான் சீக்கிரம் புறப்பட்டுச் சென்னைக்குப் போயாகவேண்டும்! முதல் இரயில் எத்தனை மணிக்கு?'

''என்னுடைய காரை எடுத்துக் கொண்டுபோங்கள் — தாமதம் வேண்டாம். போவதற்கு முன் பாகீரதியையும் சந்தித்து என் முடிவைச் சொல்லிவிடுங்கள்!''

''பாகீரதி...மகிழ்ச்சியால் துள்ளிக்குதிப்பாள்! அவளேகூட வர வேண்டுமென்று கூடச் சொல்லுவாள்'''

''ஏன்! நான்கூட உம்மோடு வந்தால் நல்லதல்லவா?''

''ரொம்ப நல்லது! புறப்படுவோம்—சரியாக எட்டுமணிக்கு!''

★

யார் ஒரு தேசத்தை அடிமைப்படுத்துகிற காரியத்தைச் செய்கிறார்களோ அவர்கள் அக்காரியத்துக்கு உண்மையான காரணஸ்தர்கள் அல்ல; யார் அடிமைப்படுத்துவதைத் தடுக்கும் சக்தி இருந்தும் தடுக்காமல் அதற்கு இடங்கொடுக்கிறார்களோ அவர்தான் உண்மையான காரணஸ்தர்கள்.

1-ம் பக்கத் தொடர்ச்சி

னுடன் குலவியவர்கள்! — இப்படியெல்லாம் பேசினார்.

"என்னடா, எவ்வளவோ மாறுதல்களை அடைந்து, இன்று திராவிட முன்னேற்றக் கழகமாக ஆகியிருக்கிறோம். இந்தக் கால மாறுதல்களையும், இப்போது நாம் என்ன சொல்லுகிறோம் என்பதையும் விட்டு விட்டு எதையெதையோ பேசுகிறாரே. இதுவா நிதிநிலை அறிக்கை விவாதத்துக்குப் பதில் அளிக்கும் விதம்" என்று நான் எண்ணியதுண்டு. ஒருவேளை, அன்றிருந்த நாம் அப்படியே இருக்கிறோம் என்கிற பலமான நம்பிக்கையிலிருக்கிறாரா? அல்லது நமது மாறுதல்களையே ஏற்கமறுக்கிறாரா? அல்லது இந்த மாறுதல்களே ஏற்படக் கூடாது என்று எண்ணுகிறாரா, என்றெல்லாம் நினைத்ததுண்டு.

அன்று அப்படிப் பேசிய நிதி அமைச்சர், இந்த ஆண்டு, அப்படிச் 'காயாதது' மட்டுமல்ல, குழைவையும் நெளிவையும் கலந்து கலந்து ஊட்டினார்! குற்றவாளிக் கூண்டிலே நிறுத்தப்பட்டவன், வாதாடுவது போல, வளைத்து வளைத்துப் பேசினார்! பேச்சுக்குப் பேச்சு, அடுக்கடுக்கு அன்பு மாலைகளைத் தொடுத்த வண்ணமே இருந்தார்! எனக்கு மிகவும் வியப்பா இருந்தது. எதிர்க்கட்சிகளின் 'சூடு' தாங்காமல் கொதித்தார் முதலமைச்சர். சூடு கண்டதும், உருகும் மெழுகாக ஆனார், நிதியமைச்சர். புள்ளி விபரங்களில் தவறுகள் ஏற்படத்தான் செய்கின்றன என்பதை ஒப்புக்கொண்டார். "வேத வாக்கு அல்ல, நாங்கள் சொல்லுவது! அந்த வேதவாக்கே பொய்க்கிறது என்று சொல்லுகிறார்கள். ஆகவே, சர்க்கார் செய்யும் காரியங்கள் எல்லாமே சரியாகயிருக்கும் என்று நான் சொல்ல வரவில்லை. குறைகளும் இருக்கத்தான் செய்யும். இதை நான் மறுக்கவில்லை" என்றார். குறைகளும் இருக்கும்! —என்பதை, நிதியமைச்சர் ஒப்புக்கொண்டார்; இப்படி அவர் ஒப்புக்கொண்டது, வியப்புக்குரியது தானே? காங்கிரஸ் அமைச்சர்களின் தவறுகளை எதிர்க்கட்சிகள் எடுத்துரைத்தால், ஒப்புவதேயில்லையே அமைச்சர்கள். கால மாறுதலை ஒட்டி புள்ளி விபரங்களும் மாறக்கூடியவைதான் என்றும் சொன்னார். புள்ளி விபரங்கள் மட்டுமின்றி, தான் ஒரு சமயம் சொன்னது நாளாக நாளாக மாறக்கூடுமென்றும், ஒவ்வொரு நாளும் புதிய புதிய சிந்தனைகள் தோன்றுவதாகவும் சொன்னார். இப்படி, சமரசகீதமும் மிகவும் தன்னடக்கமும் அவர் பேசிய பேச்சில் தென்பட்டது. இது ஒரு விதத்தில் எனக்கு மகிழ்ச்சியை அளித்தது.

கைத்தறியைவிட்டு, கதர்த் திட்டத்துக்கு பணம் விரயமாவது வீணானது என்று நாம் சொல்லும் குற்றச்சாட்டுக்குப பதிலளித்தார், சுப்ரமணியம். அப்போது அவர் தெளிவாகச் சொன்னார் — "கதரே இருக்கவேண்டும் என்பதில் எனக்குக்கூட நம்பிக்கை இல்லை" என்று. கதர் என்றால், அவசியம் இருந்தேயாக வேண்டும் என்கிறார்களல்லவா, காங்கிரஸ்காரர்கள். இது மாறலாம். இந்த இடத்தை கைத்தறியும் நிரப்பலாம், கதர் நிரந்தரமாக இருக்கவேண்டும் என்கிற நம்பிக்கை தனக்குக் கிடையாது என்றார். இதற்கும் காரணம், கால ஓட்டத்தில், கருத்துக்கள் மாறலாம் என்பதே! இப்படி, 'நமது குரல்' பல இடங்களில் தென்பட்டது, நிதியமைச்சர் பதிலில். ஒரு இடத்தில் 'வடக்கு' பற்றி சொன்னார். "வங்காளம் என்பது வடராஜ்யம் அல்ல. வடராஜ்யத்தார், வங்காளத்தையும் தமிழ் நாட்டோடுதான் சேர்த்துப் பேசுகிறார்கள் என்று.

எட்டாண்டுகளாகத்தொடர்ந்து நிதியமைச்சராக இருந்து நிதிநிலை அறிக்கையைத் தயாரித்து வருவதுபற்றி சி. என். ஏ. குறிப்பிடும் போது "இதைப்போலச்சாதாரண நிதிநிலை அறிக்கைத் தயாரிப்பதற்குப்பதில் இதைவிடப் பெரிய நிதியறிக்கை தரும் வாய்ப்பு அவருக்குக் கிடைக்கட்டும்" என்று. இப்படி இங்கே நிதி மந்திரியாக இருந்தது போதும், நீங்கள் டில்லி மந்திரியாக வருக! என்று பொருள்படச் சொன்னார், சி. என். ஏ. உடனே சுப்ரமணியம் "உங்களுக்குப் பிடிக்கவில்லை என்றால், அதற்காக என்னை வடக்கே போகச் சொல்லவேண்டாம்" என்றார். என்ன! நமது நிதி அமைச்சருக்குக்கூட வடக்கு என்றால் பிடிக்கவில்லை என்று எண்ணினேன்!!

★

மிகவும் உயர்ந்ததென நீ தீர்மானிக்கும் ஒரு இலட்சியத்துக்காக உழைப்பைப் பயன்படுத்துவதுதான் வாழ்க்கையில் உண்மையான இன்பம்.

*

எவனொருவன் மிதமிஞ்சித் தன்னைப்பற்றி பேசிக்கொண்டிருக்கிறானோ, அவன் நிச்சயமாகத் தன் குற்றங்களை மறைக்க முயலுகிறான்.

காஞ்சிபுரம், 95, திருக்கச்சிநம்பி தெரு 'திராவிடநாடு' அச்சகத்தில்